ஓம்.

இந்தி கட்டாய பாடமா?

Is Hindi a Compulsory Education?

இது அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்

உயர்திரு: ச. சோமசுந்தர பாரதியார், M. A., B. L.,

அவர்களால்

சென்னைப் பொதுமன்ற அமைச்சர்

கனம் ச. இராசகோபாலாச்சாரியார், B. A., B. L.,

அவர்களுக்கு 25-10-37-ல் அனுப்பப்பெற்ற

வெளிப்படைக் கடிதத்தின்

தமிழ் மொழிபெயர்ப்பு.



இதனைத் தமிழ் மக்கட்கு

விலையின்றி வழங்குதற்

பொருட்டுக்

கருவூர் அறிவுதயக்கழக ஆசிரியர்

திரு: ஈழத்துச் சிவானந்த அடிகள் B. A.,

அவர்களால்

கருவூர், சந்திரா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

MARCH–1938

தமிழ்மக்களே ஏமாறுதீர்கள்.

எச்சரிக்கை ! எச்சரிக்கை !! எச்சரிக்கை !!!

தமிழ்நாட்டில்

தமிழே கட்டாய பாடமில்லையே !

இந்தி கட்டாய பாடமாக்கப்படுவ தேன்?

இந்திமொழி கட்டாய பாடமானல் தமிழ்மொழிக்கு ஆபத்தே.

ஒரு நாட்டில் அரசினர் ஆதிக்கம் பெற்ற மொழியே வளர்ச்சி பெறும்; ஆக்கம் பெறும்.

ஆங்கிலம் அங்ஙனம் வளர்ச்சியும் ஆக்கமும் பெறவில்லையா ?

ஆங்கிலத்தினலன்றோ தமிழ்மொழிக்குச் செல்வாக்கில்லை ?

தமிழ்மக்களே ஆங்கில மோகத்தினல் தமிழைப் புறக்கணிக்கின்றார்கள்.

ஆங்கிலங் கற்ற தமிழ்மக்கள் ஒருவர்க்கொருவர் தமிழில் எழுதவும் பேசவும் கூசுகின்றார்கள்.

அதனலன்றோ தமிழ்மொழி வளர்ச்சி அடைந்தில்லை ?

வங்காளம் முன்னேற்ற முற்றது வங்காள மொழியினலன்றோ ? ஆங்கிலங் கற்ற வங்காளிகளும் ஒருவர்க் கொருவர் எழுதுவதும் பேசுவதும் வங்காள மொழியிலேயே. இதைக்கண்டு தமிழ் மக்கள் வெட்கமுறுதல் வேண்டுமன்றோ ?

வயிற்றுப் பிழைப்பிற்கு ஆங்கிலமே உறுதுணை என்பதனலன்றோ தமிழ் மக்கள் தமிழைக் கைவிட்டனர்!

இனி வயிற்றுப் பிழைப்பிற்கு இந்தி வேண்டுமென்றல் தமிழ் நிலை இன்னுங் குன்றிவிடுமென்பதில் என்ன ஐயம் !

தமிழ் மக்களே !

உங்கள் நல்வாழ்வுக்கு இந்தி ஒருபோதும் வேண்டாம்.

வீரத் தமிழ் மக்களே விழித்தெழுங்கள் !

இந்திக் கட்டாயக் கல்வி தமிழ் மக்கட்கு ஏற்றதல்ல
வென்பதை நன்குணர்ந்து, அதனை ஒழிக்கும் ஆக்க
வேலைக்காகப் பலமுறைகளிலும் தக்க பொரு
ளுதவி புரிந்துவரும் பெரியார்

திரு. மா. சென்னிமலைக் கவுண்டர் அவர்கள்

அரங்கபாளையம், சின்னதாராபுரம்.



திரு S சோமசுந்தர பாரதியார் M.A., B.L., அவர்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர்.

ஓம்.

"இந்தி" கட்டாய பாடமா?

சென்னை அரசாங்க முதன் மந்திரி கனம்

ச. இராசகோபாலாச்சாரியார், B.A., B.L.,

அவர்களுக்கு,

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்

ச. சோமசுந்தர பாரதியார், M.A., B.L.,

எழுதிக்கொண்டது,

ஐயா,

இப்பொழுது தாங்கள் * தன்னாட்சி மன்றத்தி (காங்கிரசி) ன் பேரால் மந்திரி சபையின் தலைவராக இருக்கிறீர்கள். நாட்டின் முழு விடுதலைக்கும், மக்களின் உரிமைக்கும் தன்னாட்சி மாசபை போராட முனைந்தது காரணமாகச் சென்ற தேர்தலில் பொது மக்கள் எல்லாரும், அதிலும் தமிழர்கள் என்ற எல்லாரும் தன்னாட்சிக்காரருக்கே தங்கள் தங்கள் உரிமைச் சீட்டுகளை (ஓட்டுகளை) அளித்தார்கள். அவ்வாறிருந்தும், தாங்கள் பதவி ஏற்றதுதான் அட்டி (தாமதம்), அடக்கு முறைகளைக் கையாளுவதில் தங்களுக்குள்ள பேரவாவைத் தாங்கள் காட்டத் துவங்கி விட்டது போலவே தோற்றுகின்றது. தங்கள் கருத்தோடு எவரும் மாறுபடுவதையோ, தங்கள் கருத்துக்களை (பிரசினைகளை) எவரும் எதிர்ப்பதையோ, தாங்கள் பெரிதும் வெறுக்கிறீர்கள் என்றுந் தெரிகிறது. தாங்கள் மந்திரி பதவி ஏற்ற இந்தச் சொற்ப காலத்திற்குள்ளாகவே தாங்கள் பிறப்பித்துள்ள சட்டங்களிலும், அமைத்துள்ள திட்டங்களிலும் இத்தகைய மனப்பான்மையே காணப்படுகிறதென்பதற்கு நான் சான்றுகள் (உதாரணங்கள்) பல எடுத்துக் காட்டக்கூடும், எனினும் தமிழ்

---

* "தன்னாட்சிமன்றம்" என்ற தமிழ்ச்சொல் "காங்கிரஸ்" என்ற ஆங்கிலச் சொல்லைக் குறிப்பதாகும், எனவே, தன்னாட்சிமன்றம் அல்லது தன்னாட்சி என்று வருமிடங்களிலெல்லாம் காங்கிரஸ் என்று பொருள் செய்து படிக்கவும்

நாட்டுப் பகுதியிலுள்ள பள்ளிக்கூடங்களில் இந்திமொழிப் பயிற்சியைக் கட்டாயமாக்குவது என்பது குறித்துத் தாங்கள் வெளியிட்டுள்ள தங்கள் நோக்கத்தைப் பொறுத்தவரையில் மட்டும் இக்கடிதத்தில் எடுத்தெழுதக் கருதியுள்ளேன்.

தாங்கள் என்னைக் கடந்த 30 ஆண்டுகளாக அறிவீர்கள்; ஆகையால், தங்களுடைய புது நண்பர்கள் (recruits) பலரைப் போலல்லாமல், நான் 1904-ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ச்சியாகவும் மாறுபாடின்றியும் தன்னாட்சிப் பற்றுள்ளவனாகவே இருந்து வந்துள்ளேன் என்பதையும், தன்னாட்சி இயக்கத்திற்கு இப்பொழுது எதிர்ப்பை உண்டாக்குவதில் எனக்கு எவ்விதமான உட்கருத்தும் இருக்க முடியாதென்பதையும் நான் தங்களுக்கு எடுத்துக் கூற வேண்டியதில்லை. சென்ற பொதுத் தேர்தலின்போது, தன்னாட்சி மன்றக் கட்சியினர் வெற்றி பெறுவதற்கு எத்துணை யுழைத்து என் தன்னாட்சிப் பற்றுதலைச்செயற்கை முறையிற் காட்டியுள்ளேன் என்பதையும், சிறப்பாகத்தாங்கள் வெற்றி பெற வேண்டுமென்று கருதிப் பல வழிகளிலும் முயன்று எத்துணை மிகுதியாக வாக்குரிமைச் சீட்டுக்கள் தொகுக்க முடியுமோ அத்துணை மிகுதியாகத் தொகுத்துக் கொடுத்துள்ளேன் என்பதையும், என்னுடைய சொந்த வாக்குரிமைச் சீட்டையும் தங்களுக்கே அளித்துள்ளேன் என்பதையும் தாங்கள் நன்கு அறிவீர்கள். இவ்வாறெல்லாம் இருந்தும், நான் இப்பொழுது தாங்கள் மேற்கொண்டுள்ள இந்தி நுழைப்பை எதிர்க்கிறேனென்றால், அதற்குக் காரணம் இத்தகைய செயல்களில் வலுக்கட்டாய முறையைப் பின்பற்றுதல் ஆணை கடந்ததொரு செயலாகும் என்பது எனது தாழ்மையான உட்கருத்து என்பதோடு, அஃது அறிவின்மை யென்பதில்லாவிட்டாலும் தகுதியற்றதொரு செய்கையாகும் என்பதேயாம். தன்னாட்சி மன்றத்தின் நற்பெயரைக் காப்பாற்ற வேண்டுமென்பதில் நான் கருத்துடையவன்; அது குறித்துக் கொண்டுள்ள தன்னுரிமைக் கொள்கைகளில் நான் ஆர்வமுடையவன்; ஆனால், ஒவ்வொருவரும் தத்தம் கடமையைத் தவறாது செய்ய வேண்டுமென்பதில் நான் அழுத்தமான நம்பிக்கையுடையவன். இவை காரணமாகவே, மக்களின் தன்னுரிமைகளைக் குறைப்பதற்கோ அன்றித் தமிழ் மொழியின் தனிச்சிறப்பையும் தமிழ் அல்லது திராவிட நாகரிகத்தையும் தாக்கக் கூடிய வகையிலோ மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியையும் நான் எதிர்த்து நின்று போராட வேண்டியவனாக இருக்கிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது வகுப்புகளி (பாரங்களி)ற் படிக்கும் மாணவர்கள் எல்லாருக்கும்,

எத்தகைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், இந்திமொழியைக் கட்டாய பாடமாக்க முடிபு செய்துள்ளதாகத்தாங்கள் விளம்பரம் செய்கிறீர்கள். இம்முடிபின்படி நிறைவேற்றுவதால் தமிழ்மொழி எவ்வகையிலும் தாக்கப்பட மாட்டாது என்பது தங்களுக்குத் தெரியுமென்றும் தாங்கள் உறுதியுங் கூறுகிறீர்கள். இதில் தங்கள் கருத்துக்கு மாறுபட்டு, தமிழ்மொழி கெட்டுவிடுமென்று அச்சங் கொள்வதெல்லாம் " அறிவிலிகளின் முட்டாள்தனமான அச்சமே " என்று தாங்கள் அழுத்தந் திருத்தமாகக் கூறுவதாக "இந்து" ச் செய்தித்தாளும் "தினமணி" யும் கூறுகின்றன. தன்னாட்சிமன்றச் செய்தித்தாளாகிய "தினமணி"யில் "அறிவிலிகள்" என்ற சொல்லைத் தாங்கள் பயன்படுத்தியதாகவே எழுதப்பட்டுள்ளது. இதைப்பொறுத்த வரையில் தங்களுடைய சொந்த எண்ணமாகத் தாங்கள் என்ன முடிவிற்கு வந்திருந்தாலும் அதைப்பற்றி நாங்கள் குறை கூறமுடியாது. ஆனால் தாங்கள் இப்பொழுது ஏற்றுக்கொண்டுள்ள பதவிக்குரிய ஆட்சிமுறையைப் பயன்படுத்தித் தங்களுடைய சொந்தக் கருத்துக்களை யெல்லாம் நாட்டாரின் கருத்தைப் பொருட்படுத்தாமல், நடைமுறையிற் கொண்டுவர முயன்றால் மட்டும் நாங்கள் வாளா விருத்தல் முடியாது. தங்களுடையதிட்டத்தைச் சட்ட வாயிலாக நுழைத்து விடுவதென்று கங்கணங் கட்டிக்கொண்டிருப்பதாகத் தாங்கள் கூறுகிறபடியால், இதுபற்றித் தாங்கள் பரபரப்பின்றி ஆர அமர ஆழ்ந்து நினைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைக் குறித்துத் தாங்கள் இதுவரை பேசியுள்ள பேச்சுக்களிலிருந்தும், விடுத்துள்ள அறிக்கைகளிலிருந்தும், இந்தியை ஏன் கட்டாய பாடமாக்க வேண்டுமென்பதற்குத் தாங்கள் கூறுங் காரணங்களாக இரண்டுதான் காணக்கிடக்கின்றன:—(1)யாரோ வடநாட்டுத் தலைவர்கள் சிலர் கூடியிருந்த கூட்டத்தில், தன்னாட்சியினர் பதவி ஏற்பதென்று முடிவு செய்தால், தமிழ்நாட்டில் இந்தியைக் கட்டாய பாடமாக்கித் தருவதாகத் தாங்கள் அளித்துள்ள சொல்லை நிறைவேற்றி வைக்க முடிபு செய்திருப்பது. (2) பிணையாட்சி (Federal) ஏற்படவேண்டுமானால் ஒரு பொதுமொழி இன்றியமையாததாகும் ஆகையால், ஏறக்குறைய பதினேழு கோடி மக்களால் முன்னரே அறியப்பட்டுள்ள இந்திமொழியைத் தமிழர்களும் கட்டாயம் பயிலுதல் வேண்டும் என்பது. நம் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களிலெல்லாம் இந்தியை இவ்வாறு கட்டாயமாக நுழைக்குந் திட்டத்திற்கு மேற்காட்டியுள்ள தங்களுடைய காரணங்கள் தகுதியானவை தாமா? நடுநிலை வாய்ந்தவை தாமா? என்பதை ஆராய்வது இன்றியமையாததாகும். ஆனால், அவ்வாறு ஆராய்வதன் முன், என்னைப்பற்றித் தாங்கள் தவறுதலாக எவ்வித எண்ணமுங்

கொண்டுவிடாதபடி நான் கூறிக்கொள்ளவேண்டியதொன்றுண்டு:— எனக்கு இந்தியின் மீது எத்தகைய வெறுப்புமில்லை. அதற்கு மாறாக இந்திமொழியை நயமாகவும் விருப்பம் போலவும் பரப்பி வருவதாகிய இந்தி விளம்பரத்தை நான் இதுவரை ஆதரித்தே வந்திருக்கிறேன். இந்தி விளம்பர (பிரசார) சபையின் தலைவரும் தலைமை ஆணையாளருமாயிருந்த பெரியார் ஒருவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்திருந்தபோது நானே பொதுக்கூட்டமொன்று கூட்டுவித்து அதற்குத் தலைமையும் வகித்தேன். காந்தியடிகளின் விருப்பத்திற்கிணங்க இந்தி விளம்பரத்திற்கு ஆதரவளிக்கவேண்டுமென நானே அக்கூட்டத்தில் எடுத்துக்கூறினேன். இந்தி விளம்பர சபையின் ஆயுள் உறுப்பினர்களில் ஒருவராகச் சேரவும் நான் விரும்பினேன்; அப்பல்கலைக் கழகத்திலிருந்த பிற ஆசிரியர்களிற் சிலரை ஆயுளுறுப்பினராகச் சேருமாறுஞ் செய்தேன். இவையெல்லாம் நான் இந்தியைப்பற்றிக் கொண்டுள்ள உண்மையான கருத்துக்களை நன்கு விளக்கும், இவ்வாறெல்லாமிருந்தும், தங்கள் சொந்தப் பொறுப்பில் தங்கள் விருப்பம்போல் தமிழிளைஞர்களின் தலையில் இந்திமொழிச் சுமையை ஏற்றி வைக்கத் தாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சி தன்னாட்சியின் நோக்கத்திற்கே மாறான தொன்றென்பதின்றியும் நானென்ற முனைப்போடு செய்யும் செயலாகும் என்றும் நான் கருதுகிறேன். அதனால், தன்னுரிமையையும் தன் மதிப்பையும் விரும்பும், ஒவ்வொரு தமிழனும் இதனை உயிரைக் கொடுத்தேனும் தடுக்கவேண்டியது கடமையாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலே தாங்கள் கூறுவனவாகக் குறிப்பிட்ட காரணங்கள் இரண்டனுள் முதற் காரணத்தை ஆராய்வாம். மாகாணங்களிலுள்ள பள்ளிக்கூடங்களிலெல்லாம் இந்தியைக் கட்டாய பாடமாக்கவேண்டும் என்ற நோக்கம் இதுவரையில் தன்னாட்சி மன்றத்தின் சார்பாகவோ, முழு இந்திய தன்னாட்சிக் கூட்டத்திலோ, தன்னாட்சி மன்றத்தின் வேலைத்திட்டக் கூட்டத்திலோ கலந்து பேசப்பட்டதாகவோ; முடிபு செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை. இந்த மூத்திறத்தாரின் உடன்பாட்டையும் பெறாமல் எந்தத் தன்னாட்சி மன்றத் தலைவர்களும்—அவர்கள் எவ்வளவு பெரியவர்களாய் இருந்தாலுஞ் சரியே—தங்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில், தங்கள் விருப்பம்போலும், நோக்கம் போலும் இத்தகைய செயல்களைப் பொதுமக்கள் தலையிற் சுமத்திவிடக்கூடிய அத்துணை அறிவாளிகள் என்று தங்களைத்தாமே கருதிக்கொள்ளக்கூடிய உரிமையுடையவர்களாகத் தெரியவில்லை. **தமிழ் அல்லது திராவிடப் பகுதிகளிலுள்ள பள்ளிக்கூடங்களிலெல்லாம் இந்தியைக் கட்டாய பாடமாக்க**

வேண்டுமென்று கேட்க எந்த வட இந்தியத் தலைவருக்கும் உரிமை கிடையாது; அவ்வாறு செய்வதாக உறுதிகூறத் தங்களுக்கும் எத்தகைய உரிமையுங் கிடையாது. இவ்வாறு ஓர் உறுதிமொழியைத் தாங்கள் செய்துகொடுத்த போதோ, தாங்களே கூறியுள்ளதுபோலவே தாங்கள் ஒரு பொதுவான (சாதாரண) மந்திரியாகக்கூட இல்லை. இவ்வாறிருக்கையில் யாரோ சில வட இந்திய நண்பர்களுக்கு, தங்களுடைய சொந்த எண்ணமாகிய ஒன்றைக் குறித்துத் தாங்கள் செய்துகொடுத்துள்ள உறுதிமொழியை, இப்பொழுது தாங்கள் அமர்ந்திருக்கும் பதவிக்குரிய செல்வாக்கையும் ஆட்சித்திறனையும் துணையாகக்கொண்டு பொறுப்பு வாய்ந்த முதல் அமைச்சராகிய தாங்கள் நிறைவேற்றி வைக்கக் கருதுவது அடாவடியாகும். தாங்கள் உண்மையான நம்பிக்கை கொண்டுதான் இவ்வாறு செய்ய முயலுகிறீர்கள் என்பதைக்குறித்து ஐயுறவுமில்லை, ஐயுறவேண்டிய தேவையுமில்லை; பதவி யேற்பதற்கு முன்னதாகவே தங்களுடைய சொந்தப் பொறுப்பில் அயலார் சிலருக்கு உறுதிமொழி கூறுவது அடாததும் ஆராயாததுமாகிய ஒரு செய்கையாகும் என்பதை மட்டுந் தங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதனோடு, தமிழ் நாட்டில் இந்தியை இப்பொழுது வலிந்து நுழைக்கத் தாங்கள் முயற்சி யெடுப்பது நான் என்ற முனைப்பும் கொடுங்கோன் முறையுமேயாகும் என்பதையும் எடுத்துக்கூறவும் விரும்புகிறேன். தன்னாட்சி மன்றத்தின் திட்டப்படியும் கொள்கையின்படியும் ஒவ்வொரு அரசாங்க சட்டத்திற்கும் பொது மக்களின் ஆதரவு இருக்கவேண்டியது இன்றியமையாததொன்றாகும்; ஆகவே, கட்சி வேறுபாடு, கொள்கை வேறுபாடு என்பவற்றை நோக்காமல் பொது மக்கள் எல்லாருடைய விருப்பங்களையும் கேட்டறிதல் வேண்டும் என்ற இந்தக் கடப்பாடு (நிபந்தனை), மாகாணத்தின் நன்மை கருதியே இந்தியைக் கட்டாய பாடமாக்கிவிடவேண்டுமென்று தாங்கள் உண்மையாக நம்புகிறீர்கள் என்பதற்காகப் புறக்கணிக்கப்பட முடியாததாகும். விடாப்பிடியும், பொதுமக்களின் விருப்பத்தைப் புறக்கணிப்பதும் "நான்" என்ற முனைப்பின் பாற் பட்ட இலக்கணங்களாகும். தன்னாட்சிமன்ற இயக்கத்தின் நோக்கமோ நான் என்ற முனைப்பு (எதேச்சாதிகாரம்) என்பதையே அடியோடு தொலைத்துவிடவேண்டும் என்பதே யொழிய அதற்குப் பெயர் வேறு கொடுத்து அதனை ஏற்றுக்கொள்வதன்று.

அமைச்சராயிருக்கும் ஒவ்வொருவரும் பொதுமக்களைக் கலந்தாலோசித்து ஒவ்வொரு செயலையும் நிறைவேற்ற முயலவேண்டுமேயன்றி, நல்லதென்று தத்தம் மனத்திடைத் தோன்றுவதையெல்லாம் பொதுமக்கள் தலையில் கட்டா

யமாகச் சுமத்திவிட முயல்வதன்று என்பதே தன்னாட்சி மன்றத்தின் நோக்க மாகும். இஃதிவ்வாறாகத், தன்னாட்சி மந்திரிசபை இன்னும் சரியாகக்கூட அமராவில்லை; அதற்குள் தாங்கள் பொதுமக்கள் விரும்புவதெது வெறுப்ப தெது என்பதை ஆராய்ந்து பாராமல் சாந்தொடுக்கத் துவங்கி விட்டீர்களே!

இனித், தாங்கள் கூறும் இரண்டாவது காரணம்:— (அ) ஒரு நாட் டிற்குப் பொதுமொழியொன்று அமையக்கூடும் என்று வைத்துக்கொண்டா லும், அம்மொழி குறிப்பிட்ட சிற்சில செயல்களுக்குத்தான் பயன்படும்; குறிப்பிட்ட சில நிலைமைகளில்தான் அதனுடைய உதவி தேடப்படும். இனித் தன்னாட்சி பெற்ற மாகாணங்கள் பலவற்றைத் தன்னிடத்தே கொண்ட ஒரு பரந்த பெருநாட்டிற்குப் பொதுமொழியொன்று வேண்டுமென்பது கட்டாய மில்லை; ஆகவே, அந்நாட்டு மக்கள் தத்தம் தாய்மொழியுடன் மற்றொரு புது மொழியையும் கட்டாயமாகப் பயிலவேண்டுமென்பது முறையற்றதாகும். புதுமொழியொன்றைக் கட்டாய பாடமாக்குவது முறையானதென்பதற்கு எந்நாட்டு வரலாற்றிலும் ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை; அது முறையு மில்லை. மாபெருந் தேயங்கள் பல பொதுமொழி யென்ப தொன்றின்றி யே தோன்றிப் பல நூற்றாண்டுகள் செழிப்புற்றிருந்தன. பண்டைக் காலத்திலிருந்த பர்சியா, சீனா, உரோம் முதலிய வல்லரசுகளென்ன; இடைக்காலத்திலிருந்த ஆஸ்திரியா, உருவ்ஷ்யா, துருக்கி, மொகல் முதலிய அரசுகளென்ன, இக்காலமுள்ள கனடா, சோவியத் உருவ்ஷ்யா முதலிய குடியரசு நாடுகளென்ன! இவையெல்லாம் தம் நன்மை கருதிப் புதுமொழி யொன்றைப் பொதுமொழியாக்கிக் கொள்ளுதல் இன்றியமையாததாகும் என்ற கருத்தேயில்லாமல் பலப்பல நூற்றாண்டுகள் சிறந்து வளர்ந்து செழித்திருந் தன; செழித்துக்கொண்டுமிருக்கின்றன. சமயச் சழக்கிலும், அரசியற் போ ரிலும் எதிரிகளைத் தொலைப்பதற்கே தங்கள் அடக்குமுறைகளைப் பயன் படுத்திவந்த பிறநாட்டுக் கொடுங்கோன் மன்னர்கள் கூடப் புதிதாகிய பிற மொழி யொன்றைக் கட்டாய பாடமாக்க முயன்றதில்லை. ஒரு நாட்டிலுள்ள பல வகுப்பு மக்களும் எப்பொழுதாவது அரசியல் முறையில் ஒன்றுபடவேண் டுமென்று முடிவு செய்வதாக வைத்துக்கொண்டாலும், அதற்குப் பொது மொழியொன்று இல்லையென்பது ஒரு தடையாகாது. ஒன்றுபடக் கருது வதென்பதில்லாமல், அவர்கள் தங்களுக்குள்ளேயே போரிட்டுக்கொள்ள வேண்டுமென்று கருதினாலும் அதைத் தடுக்கவேனும் பொதுமொழி என்ற ஒன்று உதவியாகத் தெரியவில்லை. இஃது ஒருபுறமிருக்க, இந்தி மொழிக் கும் இந்துஸ்தானி மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அவ்வாறிருந்தும்

இந்தி பேசும் இந்துக்களும், இந்துஸ்தானி பேசும் முகம்மதியர்களும் அடிக்கடி சண்டையிட்டு வந்துள்ளார்கள்; இன்னும் சண்டையிட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரே மொழியைத் தாய்மொழியாகக்கொண்டிருக்கும் சைவர்களுக்கும் வைணவர்களுக்குமிடையே இன்னும் பூசல் ஒழிந்தபாடில்லை; வைணவர்களுக்குள்ளேயே தென்கலைக்கும் வடகலைக்குமுள்ள வழக்கே ஓய்ந்தபாடில்லை. கூர்ந்து நோக்கினால், பண்டைய வரலாறுகளிலோ, இன்றைய நிகழ்ச்சிகளிலோ மொழி வேற்றுமை காரணமாக நாட்டுக் குழப்பமேனும், கலகமேனும் நடைபெற்றுள்ளதென்று எடுத்துக்காட்டுதற்கு ஓர் சான்று கூடக் கிடைக்கவில்லை. ஆனால், சமய வேற்றுமை காரணமாகவோ கடும் பூசல்கள் பல நிகழ்ந்துள்ளன. இத்தகைய கடும் பூசல்களைத் தடுத்து முழு இந்திய ஒற்றுமை யேற்படுத்துவது கருதி, ஒவ்வாச் சமயங்களைச் சீர்திருத்தியமைக்கவேண்டுமென்றோ அல்லது பொதுப்படையான ஒரு மதத்தைக் கட்டாயமாக நுழைக்கவேண்டுமென்றோ எவருந் துணிந்துகூற முன்வரமாட்டார்கள்.

எனவே, தங்கள் கொள்கைக்கு ஆதரவு தேடக்கருதி எவ்வளவு வலிந்து முயன்று கூறினாலும், ஒரு நாட்டிற் பொதுமொழியொன்று அமைப்பதென்பது முடியுமானால் அது விரும்பத்தக்கதே என்ற ஒன்றைத்தான் கூறமுடியும். ஆனாலும், அஃதொன்றே காரணமாக, பதவியேற்றுள்ள அரசியல் வழக்காளிகள் ஆதரிக்கும் ஒரு மொழியைக் கட்டாய பாடமாக நுழைக்கும் நோக்கம் முறையானதாகாது. அரசியல் வழக்காளிக்கு நல்லதென்று தோன்றும் ஒவ்வொன்றையும் கட்டாயமாக நுழைத்துவிட எந்த அரசியல் உண்மைப்பாடு (தத்துவமும்) இடந்தராது.

(ஆ) தங்கள் அறிவு மேம்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும், ஏற்றனவும் மிகவுந் திருந்தியனவுமான ஒரு மொழியினையுடைய மக்கள் தலையில் பிறமொழியொன்றைச் சுமத்த முயல்வதில் நேரிடக்கூடிய இயற்கையான குறைபாடுகளைப் பொதுமொழியொன்று அமைக்கும் முனைப்பில் மறந்துவிடக்கூடாது. இந்தி மொழியை ஆதரிப்பவர்கள் இரண்டு வகையான துன்பங்களுக்கு ஈடுகொடுக்கவும் நேரிடும், ஒன்று மக்களாய்ப் பிறந்த எல்லாருக்கும் பொதுவாக உரியது: மற்றொன்று திராவிடர்களுக்கு, அதிலும் தமிழர்களுக்குச் சிறப்பாக உரியது. பேபெல் கோபுரக் (Tower of Babel) கதையும் உண்மையான ஒரு மனித மெய்ப்பொருளியல்பையே உணர்த்துவதாகும். ஒரு கூட்டத்தைச்சேர்ந்த பல கிளைமக்களுக்கும் எக்காலத்திலும் ஒரே மொழி ஏற்றதாக இருத்தல் இயலாது. தன்னுடைய பண்டைய நிலையிலிருந்து விடுபட்டோ, சமூகக்கொள்கைகள் மரபுகள் முதலியவற்றை மீறியோ ஒரு கூட்டம் முன்

னேறிவிட்டால் அது அவ்வப்போது கலைத்துறையிலும் இன (சமுதாய) முறையிலும் வளர்ச்சியுறுவதற்கு ஏற்றவாறு மாறுதலடைந்து பலவகையாகப் பிரிந்துபடுவதியற்கையே. இதுவே மொழியில் வேறுபாடு என்னும் ஒழுங்கு முறை (நியதி) யாகும். ஆரியமொழியிலும் அதனினமான இண்டோ-ஐரோப்பிய மொழிகளிலும் பிரிவுகள் பல அவ்வப்போது உண்டாகிக்கொண்டே வருவதும், இந்தியாவிலுள்ள சமஸ்கிருத மொழியிலிருந்து பல கிளைமொழிகள் தோன்றியதும், ஐரோப்பாவில் ஜெர்மன் மொழியிலிருந்தும் இலத்தீன் மொழியிலிருந்தும் பல கிளை மொழிகள் உண்டானதும், ஒவ்வொரு கிளைமொழியும் தன்னைப் பேசுவோரையன்றி மற்றுந் தன்னினமான பிற கிளைமொழிகளினராலும் அறியப்படாமலிருப்பதும், செமிட்டிக் (Semetic) தொகுதியிலிருந்து ஈபுரு (Hebrew) மொழியும் அதனிற் பலவகையில் மாறுபட்ட அராபிய (Arabic) மொழியும் உண்டானமையும் எடுத்துக்காட்டுகளாம். இந்தியாவின் தென்கோடியிலிருக்கும் திராவிட மக்களும் இந்த ஒழுங்கு முறையில் (நியதியில்) இருந்து தப்பமுடியாமல் தத்தம் தாய்மொழியிற் பல கிளைமொழிகளையும் உட்கிளை மொழிகளையும் உடையவரானார்கள் என்பது எல்லாரும் அறிந்ததே. எனவே, அரசியலாட்சி படைத்த எவரும் திராவிடமொழியினத்தைச் சேர்ந்த ஒரு மொழியைத் திராவிட மக்கள் எல்லாரிடையும் வற்புறுத்திப் பரப்பக் கனவிலுங் கருதமாட்டார்கள். ஒரு மூலப் பொதுமொழியைச் சேர்ந்த பல கிளையினராலும் பேசப்பட்டு வந்த ஒரு மொழி விரைவில் வழக்கிழந்து மாய்வதும், காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு புதிய பல மாறுதல்களை யேற்றுத் தனிக்கிளைகளாக மாறுவதும் இயற்கையேயாகும். ஐந்நூறு ஆண்டுகள் கூட நிறைவுபெறாத இந்தி மொழிக்கு இதற்குள்ளாகவே பதினொரு கிளைமொழிகள் உள்ளன. இப்பதினொன்றும் மூன்று தனிப்பட்ட உண்ணாட்டு மொழிகளாகப் பிரிவுபடுவனவாம். மேல்நாட்டு இந்தி, கீழ்நாட்டு இந்தி, பிகாரி இந்தி என்பன அம்மூன்றுமாம். இவை ஒவ்வொன்றும் மற்ற இரண்டு கிளைமொழிகளைப்பேசும் பொதுமக்களாலேயே பொருளுணரப்படுவதில்லையென்று மொழி வல்லுனர் கூறுகின்றனர். எனவே, செம்மையுறாததும், இலக்கிய வளமில்லாததுமான இந்திமொழியையோ, அதன் கிளைமொழிகளையோ இந்தியப்பெருநாட்டிலுள்ள பற்பல வகுப்பு மக்களுக்கும் பொதுமொழியாக்கிவிட முயல்வது என்பது எருமடைக்கு நீர் பாய்ச்சுவதை யொக்கும். இஃதிவ்வாறாக, இந்தியாவிலுள்ள பல வகுப்பினர்களுக்கும், அதிலும் சமஸ்கிருதம், கிரேக்கம் போன்ற உயர்தனிச் செம்மொழிகளிலுள்ள இலக்கியப்பொருட் களஞ்சியத்திற்கு இணையான இலக்கியப் பொருட் களஞ்சியத்தையுடைய தமிழ், தெலுங்கு, வங்காளி போன்ற

திருந்திய வளர்ச்சியுற்ற மொழிகளைப் பேசும் மக்களுக்குக் கட்டாயபாடமாக ஆக்க எடுக்கும் முயற்சிக்குக் கடுமையான எதிர்ப்பில்லாமலிருக்கும் என்று எண்ணவுங்கூடுமோ?

(இ) பெருநாடுகளிலும், நாளுக்குநாள் வளர்ச்சியுற்றுவரும் இனத்தாரி (சமூகங்களி)டையும் பலதிறப்பட்ட உண்ணாட்டு மொழிகள் வழங்குவதியற்கையே. இப்பொதுக்காரணம் ஒருபுறமிருக்க, தென்னிந்தியாவில் என் இந்தியைக் கட்டாய பாடமாக்கக் கூடாதென்பதற்கு மற்றொரு சிறப்பான காரணமுமுண்டு. வகுப்பு வேற்றுமையும் கலைவேற்றுமையுமில்லாத இடங்களிற் கூட ஒரு வகுப்பினரால் வழங்கப்பட்டு வரும் ஒரு மொழி வளர்ச்சிமுறை காரணமாகவே பிரிவுபட்டுப் பல்வேறு கிளைமொழிகளாய்ப் பல்குவதுண்டு. உண்மையிவ்வாறாக, பல நூற்றாண்டுகளாகவும், பல ஊழி காலங்களாகவும், இனத்திலும், கூட்டுறவு முறையிலும், கலைவளர்ச்சித் தன்மையிலும், வரலாற்றுண்மையிலும், திணைமுறையிலும் விந்திய மலைக்கு வடக்கேயுள்ள ஆரியச் சிதைவினர், இதர வகுப்பினர் ஆகியோருக்கும் தமிழர்க்கும் இடையே மாற்றொணு வேற்றுமைகள் பல வளர்ந்துள்ள ஒரு நிலையில், ஒருவர் மொழியை மற்றொருவர்மீது வலுவிற் புகுத்தக் கருதுவது இயற்கைக்கும் நெறிமுறைக்கும் மாறான தொன்றாகும்.

தங்களுடன் வாழும் ஆரியர்களுடன் தமிழர்களுக்கு எத்தகைய மாறுபாடும் இல்லையென்று நிலைநிறுத்துவது பூசி மெழுகுவதேயாகும். ஆரியமயமான வட விந்திய வகுப்பினர்களும் தென்னிந்திய திராவிட வகுப்பினர்களும் பல் நூற்றாண்டுகளாக ஒருவரோடொருவர் நெருங்கிய தொடர்பின்றியும் மாறுபாடுகள பலவற்றுடனுமே வாழ்ந்து வந்துள்ளார்கள். இது ஒருபுறமிருக்க, மற்றொருபுறத்தில் தென்னிந்தியப் பார்ப்பனர்கள் தாங்கள் ஏதோ ஒரு சிறந்த வகுப்பினர்கள் என்றும், தனிப்பட்ட நாகரிகமுடையவர்கள் என்றும் கருதிக்கொண்டு அக்கருத்தை வெளிப்படையாகவும் வளர்த்து வருகின்றனர். வைணவ மதத்தின் பெயரால் எல்லா வகுப்பினர்களையும் ஒன்றுபடுத்தி விடலாம் என்று பேராசிரியர் திரு: இராமானுசர் எவ்வளவோ முயன்றார்; ஆனாலும். அம்முயற்சிகளெல்லாம் அவருடைய ஆரிய வெறிபிடித்த வடகலைச் சீடர்களால் மட்டுப் படுத்தப்பட்டுத் தாக்கப்பட்டன. உயிர்நெறியிலும், கலைத்துறையிலும், மொழிச் சிறப்பிலும் வடமொழிக்குத் தாழ்ந்ததே தென்மொழியாகிய தமிழ் என்று வலிந்து வாதாடவும் அச்சீடர்கள் வெட்கினாரல்லர். தமிழர்கள் எத்துணையோ பரந்த நோக்கமுடையவர்கள், ஒற்றுமைத் தன்மையுடையவர்கள்; அவ்வாறிருந்தும் ஆரியர்கள் என்று தங்களைத்தாமே

கருதி மனப்பால் குடித்துவரும் ஒரு சாரார் ஆரியர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையேயுள்ள மாறுபாடுகளை வளர்த்துப் பெருக்கிக்கொண்டே வருகிறார்கள். மறுக்கொணாத இத்தகைய உண்மைகளுக்கு எதிரிடையாகத் தென்னிந்தியாவிற் கலைவேற்றுமையோ வகுப்பு வேற்றுமையோ இல்லையென்று நாட்ட முயல்வது எய்ப்பு வித்தையேயாகும். மிக அண்மையில் உருப்பெற்றதும், நன்றாக இன்னும் வளர்ச்சியுறாததுமாகிய இந்தியைப்போன்ற ஆரியச் சிதைவு மொழியொன்று தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு எக்காலத்திலும் ஏற்புடையதாகாது. எனவே, தமிழ் மக்கள் தலையில் இந்திச்சுமையை ஏற்ற முயல்வது அவர்களை மனங்கசந்து வயிறெரிந்து வெறுப்புண்டாகச் செய்வதைத் தவிர வேறொன்றுஞ் செய்துவிடாது.

(ச) இந்திமொழி 17 கோடி இந்திய மக்களுக்கு இப்பொழுதே பொது மொழியாக இருந்து வருகின்றது என்று கூறுவது ஒரு முழுப்புரட்டேயாகும். அதைக் கேட்டாலும் நகைப்பேயுண்டாகும். அப்புரட்டை வெளிப்படுத்துவதும் பெரியகாரியமன்று. துளசிதாசர் தம் இராமாயணத்தை எழுதியுள்ள இந்தியே மைதிலி எனப்படும் மொழியாகும். அம்மொழியோ தான் பயின்று வரும் சில சில்லாக்களை யொழித்துப் பிற இடங்களிற் பேசப்படுவதில்லை. வடஇந்தியப் பிரிவுகளாகிய வங்காளம், பஞ்சாப், குசராத், பம்பாய் போன்ற பகுதிகளிலுள்ள பொது மக்களால் அஃதறியப் படுவதில்லை. அம்மொழிக்கு இலக்கண அமைப்புங் கிடையாது. அவ்வப்போது மாநாடுகள் கூட்டி அதற்கு இலக்கணம் வகுத்தமைக்க இப்பொழுதுதான் முயன்று வருகிறார்கள். ஆகவே, அம்மொழி இன்னும் சரிவரத் திருத்தமுறாத ஒரு புது மொழியாகவே இருந்து வருகிறது. திருந்திய கலை நிரம்பப்பெற்ற மொழிகளைத் தாய்மொழிகளாகவுடைய பிறமொழி வகுப்பினர்கள் அதனை உவந்தேற்றுக் கொள்ளக் கூடிய அருமையோ! பெருமையோ யாதொன்றும் அம்மொழிக்கு இல்லை. தமிழைப்போன்று மிகவும் செம்மையுற்றதும் வளம் நிறைந்ததுமான ஒரு மொழிக்கோ மைதிலி என்னும் அம்மொழியாற் கிடைக்கக்கூடிய பயன் ஒரு சிறிதும் இல்லை. இந்தியைப் பார்க்கினும் மொழித்திறம் வாய்ந்தனவும், இலக்கிய வளம் உள்ளனவும், பயிலும் மக்கள் தொகை மிகுதியுள்ளனவுமான நாட்டுமொழிகள் இந்தியாவில் இன்னும் பற்பலவுள. இந்தியைவிட உருது மொழி எழில் மிகுந்ததொரு மொழியென்பதற்கும், மிகுதியான தொகையினரால் பேசப்பட்டு வருகிறதென்பதற்கும் ஐயமே இல்லை. அவ்வாறிருந்தும், அம்மொழியை இந்தியப் பொதுமொழி யாக்கிவிடவேண்டுமென்று எவரும் இதுவரையிற் கூறவில்லை. அவ்வாறிருக்க, இந்தியை மட்டும் தமிழ்மக்கள்

தலையில வலுவிற சுமததிவிடப பாபாபபுணடாகுவதறகுரிய நெருககடியோ ஒழுஙகுமுறையோ ஏதாவது இருககிறதா?

சென்னையை யொழிநத வேறெமமாகாண மநதிரி சபையும இததகைய தோா இநதிக கிளாசசியைக கொணடுவா முனவாவிலலையெனபதும ஆழநது நினைததுப பாாததறகுரியதாகும தாஙகள கூறுகினறபடி அமமாகாணஙகளி லெலலாம இநதிமொழி அததுணை அயலமொழியனறு அவவாறிருநதும, அஙகெலலாம இநதியைக கடடாய பாடமாககு அஙகுளள தனனாடசி அமைச சாகளோ தலைவாகளோ முன வாாமையால அவாகளுககெலலாம தேயபபறறு இலலையெனறோ, தெளிவுககாடசி (தீாததரிசனம) இலலையெனறோ, பொது மொழியொனறு வேணடுமெனபதன இன்றியமையாமையை உணரும ஆறறல இலலையெனறோ கூறிவிடமுடியுமா? முடியாது மறறு, தேய மககளுககு இநதிமொழி பொதுமொழியாகக கடடாயம வேண டபபடுவதொனறாகும எனறு அவாகளெலலாம கருதவிலலையெனபது புலனும' இசசென்னை மாகாணததிலுஙகூட இநதியைக கடடாயமாகப புகுதத வேணடுமென்ற ஒரு கிளாசசி தஙகளால தான முதனமுதல; கொணடுவாப படடதெனபதை யாவரும நனகறிவாாகள எமமககள தலையில இநதியை சுமததக கருதுகிறீாகளோ, அமமககளுடைய விருபபததைத தாஙகள அறிநது கொளளக கருதியதாகவுந தெரியவிலலை கலவி யிலாகாவையோ, அதைச சோநத தலைவாகளையோ (அதிகாரிகளையோ) கலநதுகொணடு தஙகளுடைய சொநதமான இநத நோககஙகளைத திடடமாக அமைததுவிடடத தாஙகள கருதியுளளதாகவுந தெரியவிலலை தமிழமககள தலையில இநதிச சுமை ஏறபடும எனறு தோதல காலததில ஒரு குறிபபுககூடக காடடபபடவிலலை யெனபதைத தாஙகள அறிவீாகள ஆகவே, மககளிடமிருநதோ, தனனாடசி மனற அமைபபுக குழுவினரிடமிருநதோ தஙகளுககு யாதோா கடடளை (அனுமதி)யுமிலலை உணமையைக கூறுமிடததுப, பதவியேறபது வேணடு மா வேணடாமா எனபதைபபறறிய தஙகள சொநதக கருததைககூடத தாஙகள வெளிபபடையாகத தெரிவிததிலலை திரு சத்தியமூர்த்தியைப் போனற தலைவாகள சிலா பதவி யேறறுததான தீரவேணடும எனறு தலைப பாடாய அடிததுககொணடிருநத போதெலலாம தாஙகள மதில மீதிருநத பூனையைபபோல வாளாவிருநதீாகள ஆனால, அவாகள செயத கிளாசசி நிறைவேறிப பயனகொடுககுந தருவாயில திடுமெனத தாஙகள உளளே நுழைநதீாகள, பதவியோ—பதவி யெனறு சணடையிடடுககொணடிருநத வீாாகளெலலாம உஙகளுககு இடமவிடடு ஒதுஙகவேணடியதாயிறறு பொது

மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற தமிழ்நாட்டுத் தன்னாட்சிக் கூட்டத்தலை வருக்குக்கூட சென்னை மேல்சபையுள் (Assembly) இடங்கிடைக்கவில்லை; ஆகவே, தங்களோடு போட்டியிட்டு எதிர்ப்பதற்கு ஆளில்லாமற் போயிற்று. முதன் மந்திரி பதவியைத் தாங்கள் ஏற்றுக்கொண்டீர்கள். தங்களுக்கு வேண் டியவர்களுக்கெல்லாம் தங்கள் விருப்பம்போல் ஆதரவு அளிக்கத் துணிந்துவிட் டீர்கள் அரசியல் நடைமுறையிலும் சட்டங்கள் பிறப்பிப்பதிலும் தங்கள் கட்சிக்காரர்களைக்கூடக் கலந்துகொள்ளாமல் தங்கள் விருப்பம்போல் நடந்து கொள்ளத் துணிந்துவிட்டீர்கள். தங்களுடைய வல்லரசு முறையும், தடபுடல் தர்பாரும், எதிரிகள் கருத்தை ஏற்றுக்கொள்ளாமையும் தங்களுடைய தன்னாட் சிமன்றக் கூட்டாளிகளுக்குள்ளேயே பெரும் பேச்சாக இருந்து வருகின்றன. இவற்றைப் பற்றிய குறிப்புகள் அடிக்கடி பொறுப்பு வாய்ந்த செய்தித் தாள்க ளிலும் வெளிவருகின்றன. தன்னாட்சிமன்றத்தார் வரவர மிகவுந் தட்டழிந்து வருகின்றனர்; தங்கள் கருத்துக்கு எவ்வளவோ அவர்கள் மாறுபட்டிருந்தாலும் அம்மாறுபாட்டை வாய்விட்டு வெளியிற் கூறக்கூடாத ஒருநிலைக்குத் தாழ்த்தப் பட்டு விட்டார்கள். தங்களுடைய ஆணையும் அரவணைப்பும் திரு நாடிமுத்துப் பிள்ளை போன்றவர்களையே கைகால் ஆடவொட்டாமற் கட்டிப் போட்டு விடுகி ன்றன. தங்களுக்குப் பிறவி எதிரிகளாய் இருந்தவர்களைக் கூட, வேறுபாடுகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்துத், தங்களுடன் ஒத்துழைக்குமாறு செய்துவிடுகின்றன; இத்தகையதொரு நிலைமையில் கனம் கல்வி மந்திரியார் அவர்கள், அண்மையிற் பலவூர்களைச் சுற்றிப் பார்த்து வந்ததன் பயனாய், தாம் தன்னாட்சிக்காரர் என்ப தற்குள்ள கட்டுப்பாட்டையும் பொருட்படுத்தாமல், பின்வருமாறு கூறியுள்ளது ஒருவாறு ஆறுதலையளிப்பதாகும். தங்களுடைய இந்திக் கிளர்ச்சிக்கு எதிர்ப்பு எங்கணும் மிகுதியாகக் காணப்படுவதால், "அரசாங்கத்தார் திட்டத்தை நடைமுறைக்கு (அமுலுக்கு)க் கொண்டுவரும்போது அத்துணை எளிதாகத் தோற்றவில்லை............ தன்னாட்சி அரசாங்கமே யானாலும் பொதுமக்கள் விருப்பத்திற் கிணங்கக் கருத்துக்களை மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும்."

தங்களுடைய கூட்டாளிகளில் ஒருவர் இவ்வாறு கூறியுள்ள நல்லுரை யை யேற்றுக்கொண்டு, பொதுமக்களின் கருத்திற்கிணங்கத் தங்கள் பிற் போக்கான கொள்கையை மாற்றிக்கொள்ளப்போகிறீர்களா? தன்னாட்சிமன்ற அமைச்சர்கள் பொதுமக்களின் ஊழியர்களென்றும், பொதுமக்களின் விருப் பத்தை நிறைவேற்றி வைக்க அவர்கள் கடமைப் பட்டுள்ளார்கள் என்றும் தாங்கள் ஒரு மூச்சிற் பறைசாற்றுகிறீர்கள்; ஆனால், மறு மூச்சிலோ தமிழ் மக் களின் எதிர்ப்பையும் கிளர்ச்சியையும் உதறித்தள்ளிவிட்டு எல்லாப் பள்

ளிககூடஙகளிலும இநதியைக கடடாய பாடமாககிவிடபபோவதாக அசசுறுததுகிறீாகள ஒனறறகொனறு நேரமாருன இவ இரணடு கொளகைகள எவவாறு ஒவவும எனபது விநதையாகவே உளளது.

(உ) இநதியைக கடடாய பாடமாககுவதால தமிழமொழியோ, தமிழா நிலேயோ எநத விததிலும கேடுருமெனறு தாஙகள உறுதி கூறுகினறீாகள ஆனல, தமிழ மககளின தலைவாகளேயோ அனறித தமிழகறற பெரியாாகளேயோ கலநது இதுபறறி அவாகள கொணடுளள கருததுககளேத தெரிநது கொளளத தாஙகள மனம வைககவிலலே டாக்டர் சாமிநாதயயர், சுவாமி வேதாசலம் முதலிய பேராசிரியாகளும பேரறிஞாகளும தஙகள கூறறை மறுததுளளதாகத தெரியககிடககிறது இநதியாவிலுளள ஒரே தமிழப பலகலேக கழகததிலுளள தமிழ ஆசிரியாகள எலலாரும தஙகள திடடததை வனமையாகக கணடிதது இநதியைக கடடாய பாடமாககுவதால தமிழ மொழியும, தமிழா நாகரிகமும கேடுறுவது திணணம எனறு உறுதி கூறுகிருாகள தமிழப பணடிதாகள எலலாரும தஙகள திடடததை எதிாககிருாகள எனபது யாவரும அறிநததே, அதனல அவாகள தஙகளாலும மநதிரி மனறததிலுளள தஙகளுடைய சில புதுககூடடாளிகள சிலராலும " அ றி வி லி க ள " எனறு இகழபபடுகிருாகள

(ஊ) இவவாறு தஙகள திடடம தமிழவலல தலைவாகளால எதிாககபபடுவது ஒரு புறமிருகக, வேறுசில மறுககககூடாத தடைகளும அதறகு இருககினறன கலவிததுறைப பேரறிஞாகளான டாக்டர் அருண்டேல், தலைமை ஆசிரியா சாரநாத ஐயங்கார் போனறவாகளும, இனனும இவாகளபோனற தோநத தலைமையாசிரியாகளான திரு அரங்கநாதையங்கார், மாசிலாமணி போனறவாகளும முதல மூனறு பாரஙகளிற படிககும மாணவாகளுககு இநதிமொழியைக கடடாய பாடமாககுவது பெருஞசுமையேறறுவதாகும எனறும, அவாகளுடைய அறிவு வளாசசிககும, உடல வளாசசிககும அஃது ஊறு பயபபதாகுமெனறும எடுததுக கூறியுளளாாகள மேலே நாடுகளிலுளள பிளளேகளுககு மூனறுமொழிகளும நானகு மொழிகளும கடடாய பாடமாககறபிககபபடடு வருகினறனவே! அநநாடடுச சிறுவாகளுககுககடினமாகததோனருத ஒனறு உழைபபும ஊககமும மகுநத தெனனிநதியச சிறுவாகளுககுக கடினமாகத தோனறுமோ எனறு விடையிறுககபபடுகிறது அணமையில வெளிவநதுளள இநதி பாலபாட புததகமொனறில தாஙகள எழுதியுளள முனனுரையில தமிழ நாடடுச சிறுவாகள இரணடலல, மூனறலல ஐநதுமொழிகளேககடடாய பாடமாகப படிகக வேண

டுமென்று தாங்கள் வளாசியிருக்கிறீர்கள்:— (1) நாட்டு மக்களுடன் பேசுவதற்குத் தாய்மொழி (2) தமிழ் நாட்டையடுத்த பகுதிகளிலுள்ள மக்களோடு உறவாடுவதற்கு மறறொரு திராவிடமொழி (3) இந்தியா முழுவதும் சுற்றுவதற்கும் பிணையாட்சியில் ஈடுபடுவதற்கும் பயன்படுவது கருதி இந்திமொழி (4) உலகப் பொதுமொழியாக உதவ ஆங்கிலமொழி (5) கலைத்துறை நிறைவு கருதிச் சமஸ்கிருத மொழி. கல்வி வளர்ச்சித்திட்டத்தில் இதுவே தாங்கள் கொண்டுள்ள முடிவான நோக்கமுங் கொள்கையுமாகும். இந்நோக்கத்தையும் கொள்கையையும் தங்களுக்கு ஒத்தூதும் செய்தித்தாள்கள் வானமளாவப்புகழலாம். ஆனல், பொறுப்பும் கண்ணியமும் வாய்ந்த 'இந்து','மெயில்' போன்ற செய்தித்தாள்கள் தங்களுடையபோலித்திட்டங்களைச் சுடச்சுட, ஈவிரக்கமில்லாமல் கண்டித்தொழித்தன. பிரிட்டினிலோ, அமெரிக்காவிலோ எந்தக் கல்வி நிலையங்களிலும் அரசாங்கத்தார் தலையிடும் வழக்கமோ, வலுக்கட்டாயமோகிடையாதென்பதுயாவரும்அறிந்ததே ஆங்குள்ள பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் எல்லாம் அறநிலையங்களே. இத்தகைய அறநிலையங்களுள், ஆக்ஸ்போர்ட் (Oxford), ஈட்டன் (Eton) போன்ற சில இடங்களில தான் ஆங்கிலத்துடனும், தற்காலமொழிகள் சிலவற்றுடனும், பண்டைமொழிப் பயிற்சி கட்டாயமாக அமைக்கப் பெற்றுள்ளது; அதுவும் மொழிப் பயிற்சியில் பட்டம் பெற விழைபவர்களுக்கே பண்டை மொழிப்பயிற்சி கட்டாய பாடமாக அமைந்துள்ளது. மற்ற மாணவர்களெல்லாம் தங்கள்தங்கள்விருப்ப பாடங்களை யெல்லாம் தங்கள் தங்கள் தாய்மொழியிலே தான் பயிலல் வேண்டும். இன்னொரு முதன்மையான குறிக்கோள் என்னவென்றால். இத்தகைய சில கல்லூரிகளும் பள்ளிக்கூடங்களும் பெருஞ்செல்வர்களும் ஓய்வு மிகுதியுமுள்ளவர்களுடைய பிள்ளைகளுக்காகவே நிறுவப் பெற்றுள்ளனவாம் என்பதே. தற்கால மொழிகளிலும் பண்டை மொழிகளிலும் தங்களுக்குப் பயிற்சி யுண்டென்று வெளியிற் காட்டிக்கொள்ள விழையும் அத்தகையோரின் ஆடம்பர நோக்கத்திற்கு ஆதரவளிப்பதாகவே அந்நிலையங்கள் நிறுவப் பெற்றுள்ளன. ஆனல்,வர வர இந்நிலையங்களிற்கூடக் காலத்திற்கேற்றவாறு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. தற்காலத்திற்கேற்ற பகுத்தறிவு வளர்ச்சிக்கு ஏற்றவாறு பாடங்கள் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு புறமிருக்க, முதன்மையாகக் கருத்திற் கொள்ளவேண்டுவதென்னவென்றால், ஆண்டுள்ள பள்ளிக்கூடங்களிற் பெரும்பாலானவற்றில் மாணவர்களின் ஆற்றல், விருப்பம், பிற்கால வாழ்க்கை முதலிய எவற்றையும் பொருட்படுத்தாமல் பல மொழிகளைப் படிக்குமாறு அவர்களைத் தன்புறுத்துவதில்லை யென்பதேயாம், இவையெல்லாம் இல்லையென்றும், உண்மைகள் வேறுவிதமாக இருப்பனவாகவும் வைத்துக்கொண்டாலும், நம்முடைய பள்ளிக்கூடங்களில் பகுத்தறிவிற்கும்

இயறகைககும ஒவவாத இமமுறைகளை நாம என பினபறறுதல வேணடும நம முடைய பளளிககூடஙகளில இபபொழுது பயினறு வரும முறை மிகவும ஏறற தொனறேயாகும வேணடுமானுல மிகவும குறைநத உழைபபில நிறைய அறிவைப பெறுவதறகுரிய வழிகளில அதனைத திருததியமைததுக கொளள லாம, இவவாறு திருததியமைபபதறகு எளிதான உறுதியான வழி தாயமொழி யைப பளளிககூடஙகளிலும கலலூரிகளிலும கடடாயமாககுவதும, அதன வாயிலாகவே எலலாப பாடஙகளையும கறகசசெயவதுமேயாம கனனட சிலலா ககளில இமமுறையைக கையாணடு வநததில வெறறியே கிடைததுளளதென பது ஆஙகு வெளியிடபபடடுளள பல அறிககைகளால காணககிடககிறது தாயமொழி கடடாய பாடமாககபபடுவதுடன தாயமொழியிலேயே பாடசாலை களிலும, கலலூரிகளிலும எலலாப பாடஙகளையும பயிறறுவிததல வேணடும மேலும், எலலா மாகாணஙகளிலுமுளள அற மனறஙகளிலும, சடடசபைக ளிலும, கூடடுறவுததுறைகளிலும, அரசாஙக அலுவல முறையிலும தாயமொ ழியே வழஙகுமாறு செயதல வேணடும இதுவே சிறநத அறிவோடியைநத முறையாகும இதை விடடு ஒரே ஒரு மாகாணததில இநதியைக கடடாயமா கவோ, அரசாஙகததின கடடுபபாடடினுலோ கடடாயமாகக கொணடுவநது புகுததுவது இளம பிளளைகளான மாணவாகளின கலவி வளாசசிககு மிகபபெ ரியதொரு தீஙகிழைபபதாகும இது அழுநதியறிநது தோநத கலவி வலலுனா களின முடிபாகும கிறிததுவக கலலூரி மாணவாகளின முனனிலையில சொற பொழிவொனறைத தாஙகள நிகழததிய போது ஒவவொரு செயலையும பாபாப புபபடடோ அடாவடியாகவோ செயயத தஙகளுககு விருபபம இலலையெனறும, ஆராயசசி நிறைநத ஆசிரியாகளைக கலநது அவாகள ஆலோசனையினபடி தஙகள நோககததை மாறறவோ, கைவிடவோ கருதியிருபபதாகவும தாஙகள கூறினீா கள ஆனுல, அவாகளிற பெருமபாலாா தஙகளுடைய திடடததிறகு ஆதரவ ளிககாமற போகவே அவாகள எதிாபபைத தாஙகள புறககணிதது விடட தாகக கூறபபடுகிறது -இதனுல், தஙகள கொளகையைத தாஙகள எவவகை யிலும நிறை வேறறி விடுவதெனறு முடிவு செயதுளளதாகவும், எதிரிடையாகக கூறபபடும எநத ஒழுஙகுமுறைகளையும தாஙகள ஏறறுககொளளப போவதிலலை யெனறும காணககிடககினறது ஆனுல, நான மடடும இவவாறு தஙகளைப பறறிக கூறபபடுவன வெலலாம விளமபரபபடுததுவோரின (Reporter's) அறியாமையேயனறித தஙகள குறறமலலவெனறே இனனும நமபுகிறேன

(சி) இதுமடடுமனறு வெவவேறு பழகக வழககஙகளும பல வேறு சமூகஙகளும நெருஙகி நினறுஙகூடக கலநதுகொளளாத மாகாணஙகளின

ஆட்சியில், தங்களுடைய கருத்துக்கு நடுநிலைமை வகிக்கும் எல்லா அரசியல் வழக்காளிகளின் மனந்திறம்பாத முதன்மையான கண்காணிப்புக்கும் தகுதியான, இன்னும் பிறிதோர் தடைஉண்டு. தமிழுக்குப் புறம்பானதும் வடமொழிக்கு நெருங்கிய உறவுடையதுமான இந்தியைக் கற்பதில் சுண்ணும்பினின்றும் தீம்பால் வேறுபட்டதுபோல், வடமொழியும் அதனோடு தொடர்புடைய பல மொழிகளிலும் வேறுபட்டதான மூலதத்துவமுள்ள தமிழையே தாய்மொழியாகக்கொண்டுள்ள பிள்ளைகளைக் காட்டிலும், வேறு சில சமூகத்துப்பிள்ளைகள் தற்போதைக்கும் எதிர்காலத்தில் சில்லாண்டுகட்கேனும் இயற்கைத் திறனும் வசதியும் உடையவர்களாய் இருப்பார்கள் என்பதை யாருமே மறுக்க முடியாது; தாங்களும் மறுக்கமாட்டீர்கள் என்பதை நான் அறிந்தே கூறுகின்றேன். இந்த இரண்டு மொழிகளின் கிளைகள், ஒலிப்பதிலும், சொற்களின் புணர்ச்சியிலும், உருபுகளின் மாற்றத்திலும் ஒன்றுக்கொன்று திசை மாறினவையாக நிலவுகின்றன. பழக்க வழக்கங்களும், வழிவழி பழக்கத்தில் கொண்டுவரப்படும் பிற செயல்களும் தமிழ் நாட்டின் சில கூட்டத்தாரைச், சமய காரியங்களையோ பல கூட்டுறவுச் செயல்களையோ முன்னிட்டு வடமொழியுடன் நெருங்கி இயங்கும் தொடர்பில் வைத்திருக்கின்றன. இவ்வாறுள்ள கூட்டத்தின் தொடர்புடைய மாணவர்கள் தங்கள் உடனொத்த தமிழ் மாணவர்களைக் காட்டிலும் இந்தி பயில்வதற்குத் திண்ணமாய் மேம்பட்ட வசதியுடையவர்களாய் இருப்பார்கள்.

(எ) மேலும் நம் மாகாணத்தில் உயர்தரப் பள்ளிக்கூடங்களின் நிலைமையையும், கல்வியின் அமைப்புத் திட்டத்தையும் பொறுத்து விரைந்து ஏற்படும் மாறுதல்களும், திருத்தி அமைக்கும் நோக்கங்களும் இருந்து வருகின்றன பரிபூரணத்துவத்தின் பேராலே, (உள்ளபடியே) மேற்படிப்பின் சீரிய உயர்தரப் பள்ளிக்கூடங்களின் மேல் வகுப்புகளில் அளவுக்கு மீறிய கூட்டங்கள் ஏற்படாதிருக்கும்பொருட்டு, மூன்றுவது பாரத்தின் இறுதித்தேர்வில் ஒரு அழுத்தமான தடை வகுத்து அரணிக்கப்படுமென்றும், அவ்வாறு உயர்தரக் கழகக் கீழ் வகுப்புக்களின் இறுதியிலுள்ள தேர்ச்சியில் நூற்றுவீதக் கணக்குள் மிகக் கூடுதலான குறிகள் (Marks) கொண்ட ஒரு சிலர் நீங்கலாக, ஏனையோர் மேலான கல்லூரிக் கல்விக்கு அடிகோலுவதாயுள்ள உயர்தரக்கழக மேல் வகுப்புகளில் சேர்வதற்கு மறுதலிக்கப்படுவார்களென்றும் உய்த்துணரக் கிடக்கின்றது. அவ்வாறுள்ள தடைவிலக்குப் பந்தயத்தில் பின்னும் ஒரு பொருளாயுள்ள இந்தியும் கூடுதலான ஒரு திட்டமாக உடன் பிணைத்தே நிகழ்வதாகும். வடமொழித் தொடக்கில்லாத அல்லது தனித்தமிழ் மாணவர்

கள் வேறு தனி உரிமைகொண்ட வகுப்பினரோடு கொள்ளும் முறைகேடான போட்டியினால் ஏற்படும் இடர்ப்பாடான பயன்கள் என்னவென்று தீர்மானிப்பதற்கு, ஓரமற்று நடுநிலைமை தாங்கித் தீர்ப்போர் ஏதொரு எதிர்வழக்குமின்றி அக்கணமே அவற்றை அறிந்துகொள்பவராகின்றனர். மேற்கல்விக்கும் அதனால் உணரக்கிடக்கும் எல்லா மேல் நிலைகளுக்கும் போகா வண்ணம் தடை செய்யப்படவிருக்கும் ஒருகூட்டத்து இளைஞர்களின் பிற்கால வாழ்வின் நிலை என்னவாகும்? இவர்கள் இவ்வாறு வலிந்து தண்டிக்கப்படுவது இவர்கள் இழைத்த ஏதேனும் குற்றங்களுக்காகவா, அல்லது பொறாமையோடு கூடிய பகைமை இலதெனினும், இரக்கமற்ற புதிய நயநீதி முறைகள் இவர்களுக்கே உரிய மாகாணத்தின் கல்விமுறையில் நுழைக்கப்படுவதனாலா? சமூகப் பகைமைக்கு ஆளாகப்படாதென்ற கவலையுள்ள யாவரும், நினைவிலாழ்ந்து பார்க்கக்கூடியதல்லவென்று அப்பொழுதே தள்ளிவிடக்கூடாததும், ஆழ்ந்து சீர்தூக்கி விடையிறுக்க வேண்டுவதுமான மற்றோர் உண்மையும் கூறப்படுகின்றது. இம்மாகாணத்தில் சற்றேறக்குறைய எண்ணாயிரம் உயர்தரக் கீழ் வகுப்புப் பள்ளிக்கூடங்கள் (Lower Secondary Schools) நிலவுகின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களின் உயர்தரக் கீழ் வகுப்புக்கள் மூன்றிலும் இந்தி கட்டாய பாடமாக புகுத்தப்பட்டால், அதைவிடக்கூடுதலாய் இல்லாவிடினும் குறைந்தபேர் எண்ணாயிரம் ஆசிரியர்கள் அமர்த்தப்படுவார்கள். தற்போது கிடைக்கக்கூடிய பயிற்சிபெற்ற இந்தி ஆசிரியர்கள் எல்லாரும் பெரும்பாலும் அயலாராகவேனும், தமிழரல்லாதவராகவேனுந்தான் இருக்கின்றனர். இஃது இற்றைக்கு மட்டுமன்று; இன்னுமோர் நன்னெடுங்காலம் வரை இவ்வாசிரியப் பதவியானது தமிழகத்திலுள்ள எல்லா இனத்தாருக்கும் சரியொத்த பங்குப்படி வழங்கப்படுவதற்கு வழியேற்படப்போவதில்லை.

(ஐ) இக்காரியங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் மிக்கதொன்றுண்டு; அதாவது, ஒரு மொழியானது ஒருவிதமான மக்கட் பிரிவினர் அல்லது குடிமக்களின் தாய் மொழியாய்த் துலங்குங்கால், அது, அப்படிப்பட்டவர்களின் பயிற்சியையும் வளர்ச்சியையும் திட்டமாக உருப்படுத்துகின்றதாகலின், அம்மொழியே அவர்களுடைய வாழ்க்கையின் உருவகமாயும் ஆதாரவாயும் நிற்கின்றது. ஒரு நாட்டின் தாய்மொழிக்கும் அதன் நேர்மையான சீர்மைக்கும் உள்ள தொடர்பானது அதனை அற்பமென்று புறக்கணிப்பதையோ, வேண்டுமென்று அதில் தலையிடுவதையோ பொறுக்க இயலாததாக அவ்வளவிற் கலந்து ஒன்றுபட்ட உருக்கொண்டதாக நிகழ்கின்றது. இந்தி தமிழ்மக்கட்குப் புறம்பானது; அது தமிழர்களின் நேர்

மைக்கு மாறுபட்ட வேற்றுவிதமான நேர்மையையே காட்டுவதாயுள்ளது; இந்தி கற்பதனால் ஏதேனும் ஊதியம் உண்டெனில், அதனை அடைய விரும்புவோர் மட்டிலும் அதனை விருப்ப பாடமான அளவிலேயே பயிலுவதாய் இருந்தால், அப்பொழுது இந்திக் கல்வியினால் தமிழ்மக்கள் தொகுதிக்கும், அவர்களபால் நிலவும் தமிழ் நேர்மைக்கும் ஒருவாறு அழிவு ஏற்படாமல் இருக்கலாம். ஆனால், எதிர்காலத்தில் எல்லா மக்களுக்கும் இந்தியைக் கட்டாயமான பொது மொழியாக ஆக்கப்படுவதாயிருந்தால், தமிழர்களுக்கே உரிய தனித்திறமையும் தனி நேர்மையும் நேர்மாறாகத் தாக்கப்படுவதினின்றும் தப்ப முடியாது. தாங்கள் ஒருவேளை தமிழையும் இந்தியையும் கட்டாயத்தின் பேரில் ஒன்று படுத்துவதனால் யாதாயினும் புதிய நேர்மை பிறக்கலாம் என்று வருங்காலப் பலன் உரைக்கலாம், ஆனால் அங்ஙனம் தோன்றுவது எவ்விதத்திலும் தமிழர் நேர்மையாகாது. ஒரு மக்கட் டொகுதியின் நேர்மையும் அதன் மொழியும் தன் இனத்ததான வேறு மொழிகளோடு இயற்கையாய்த் தொடர்பு கொண்டு, அதனால் உருப்பட்ட வளர்ச்சியும் பெருக்கமும் அடைவது வேறு செய்தியாகும். அது விரும்பத் தக்கதாகவும் இருந்துவிடலாம். ஏனெனில் அப்படிப்பட்ட இயற்கைப் போக்குகளினாலே ஒரு சில மூலப்பகுதிகளும் தகுதியுள்ள சில அங்கங்களும் மட்டிலுமே அம்மொழிக்குள் செரித்தடங்குவனவாகும். ஆனால், இயற்கைக்கு முரண்பட்டனவாய்ச், செயற்கை நலன்கள் கொண்டனவாய் வலிந்துகொள்ளும் சேர்க்கைகள் அச்சத்தைத் தருவதான அரக்கினத்தைப் பயக்காவிடினும், விரும்பத்தகாத கொடுமையையே பயப்பனவாகும். உளமுவந்து கொள்ளத்தக்கதும் மிக அளவு பட்டதுமான ஆங்கிலம் போன்ற அயல் மொழிகளின் தொடர்பு, அதுவும் வேற்றரசர்களிடத்தே நம்மவர்களிற் சிலர் ஏற்ற அரசியற் றொழில்களின் தொடர்பு பொதுவாய் இந்திய மொழிகளினும் சிறப்பாய் ஒப்புயற்வற்ற தமிழும் தமிழையொத்த மொழிகளுடையவும் உயிர்நாடியையேனும் பேரமைப்பையேனும் பிடிக்காததாகவும் பிடிக்கமுடியாததாகவும் இருக்கின்றது. பதவிவேட்டைக்காகச் சில தமிழ்மக்கள் தற்செயலாய் ஆங்கிலத்தோடு தொடர்பு வைத்திருப்பதையும், தமிழகம் முழுமைக்கும் கட்டாயப் பொதுமொழி என்று மிரட்டப்படும் இந்தியின் விடாப்பிடியையும் ஒப்பிட்டுக் கூறுவதற்குள்ள இயைபு ஒன்றுமே இல்லை. ஆதலின், தமிழின் பண்பு, தன் தனித்தியங்கும் வாய்ப்பையும் விலையிடுதற்கரிய நன்மதிப்பையும் இந்தியின் கட்டாயக் கலப்பினால் இழந்துவிடும் நிலைமையிலேயே நிற்கின்றது.

இத்தீமைகளையெல்லாம் ஒருவாறு ஏற்பதைத் தவிர்க்க முடியாதாயின், ஏற்கவேண்டியதாயிருக்கலாம். என்றாலும், தன்னாட்சிமன்றத் தலைவர்

களைத் தேர்ந்தெடுப்பதிலும், தன்னாட்சிமன்ற அமைச்சர் குழுவினரை அமைப்பதிலும் தங்கள் சொல்லுரிமைகளைப் பேரார்வத்துடன் தந்துதவிய தமிழ் மக்கட்கு இத்தகைய விலைபெற்ற கொடையை அளிப்பதனால் ஒரு தன்னாட்சிமன்ற முதன் மந்திரி குற்றமற்றவராகவே கருதப்படுவாரோ?

(ஒ) இந்தியானது இவ்வாறு விளைவிக்கும் தடுக்கமுடியாத தீங்குகளையும் கெடுதல்களையும் தகைமையுடன் சரிப்படுத்தி, ஊதியம் பயக்க வல்ல நலன்களை அள்ளிக்கொடுக்குமென்று தாங்கள் கூறுகின்றீர்கள். தமிழறியா நிலங்களிற் (வட இந்தியாவிற்) சென்று தமிழ்மக்கள் தங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு இந்தி நன்னெறியைக் காட்டுமென்பதும் தங்கள் சூசனைகளில் ஒன்றாயிருக்கிறது. இது உண்டியல் வருமுன்னே கணக்குப் பார்ப்பதிலும் மோசமாயிருக்கிறது; முட்டை பொரிப்பதற்கு முன் குஞ்செண்ணிப் பார்ப்பது போலவுங்கூட அல்ல, இது கோழி முட்டையிடுவதற்கு முன்னமேயே குஞ்செண்ணிப் பார்ப்பது போலாகின்றது. முதலாவது இந்தியாவிலுள்ள எல்லா இந்திதெரியா மாகாணங்களிலும் இந்தியே பொதுமொழியாக ஒப்புக்கொண்டாகவேண்டும். முதன்மையாக வேறு எங்கேனும் இந்தி மொழிக்கு இவ்வளவு நெருக்கடியான இன்றியமையாமை உண்டென்னும் நோக்கம் இப்போதைக்கு இருப்பதாக ஒன்றும் தோன்றவில்லை. ஒருவேளை தங்களுக்கு அருளப்பட்டிருப்பது போன்ற நாட்டுப்பற்றின் செறிவும், முந்துறு காட்சித்தெளிவும் வாய்க்கப்பெற்ற தன்னாட்சிமன்ற மந்திரிகள் அம்மாகாணங்களில் இல்லைப்போலும்! மேலும், வேலையில்லாத் திண்டாட்டம் நந் தமிழ்நாட்டினர் தலையில் மட்டிலும் விழுந்த ஒரு தீய ஊழ்ப்பயனோ? இது ஒவ்வொரு மாகாணத்திலும் நாட்டிலும் பரவினதாகவும், நாளுக்குநாள் மிகுதியாக வீறிட்டெழுந்து வளர்வதாகவும் இருக்கின்றது. வேறு நாடுகளில் இருந்துவந்து பிறர் வகுத்துக்கொண்டிருக்கும் தொழில்களைக் காட்டிலும் மிகுதியாகத் தமிழ்மக்களுக்கு வேறு நாடுகளில் ஏராளமான தொழின்முறை ஊதியங்கள் பெறுவதற்குரிய உதவிகள் செய்வதாகத் தாங்கள் கூறும் இந்தச் சொல்லுறுதியானது, சிறுபொழுதுதானும் ஊன்றி ஆராய்ந்து பார்க்கத்தக்க ஒரு ஆறுதலையும் அளிக்காது.

(ஓ) தாங்கள் பலதடவைகளிலும் வற்புறுத்திக்கூறும் மற்றொரு பயனாவது; வட இந்தியாவிற்குச் செல்ல வேண்டியவர்களாயுள்ள தமிழ் மக்களுக்கு இக்காலத்திலே சிற்சில வேளைகளிலே இந்தி பயன்படும் என்பதே. தங்கள் சொற்பொழிவுகள் ஒன்றில் தமிழ்நாட்டின் எல்லைக்குள் எத்தகையோராயினும், எது

பற்றியாயினும் இந்திமொழியை வழங்க விடமாட்டோம் என்று கூறியதாக விளம்பரப்படுத்தப் பட்டீர்கள். அஃதங்கனமாக, இவ்வாறு எதிர்காலத்தில் என்றென்றைக்கும் எல்லாத் தமிழ்ச் சிறுருக்கும் இந்தியைக் கட்டாயப் பொது மொழியாக ஆக்குவதானல், யாண்டே உளது ஒழுங்கு! யாண்டே உளது தேவை! தங்கள் வாணிபம் தொழில் அல்லது பதவிக்காக இந்தியோ அன்றி வேறு மொழியோ இன்றியமையாது வேண்டியதுதான் என்று கருதும் அத் தகையினர், அம்மொழிகளைத் தாங்களே உளமுவந்து பயிலுமாறு விட்டு விடலாம். எப்படியாவது இந்திக்குச் சிறிது ஆதரவு காட்டித்தான் தீர வேண்டுமானல், ஆங்காங்கு வழங்கப்படும் தாய்மொழியுடன் விருப்ப பாடமாகப் பயிலுமாறு தகுதியுள்ள அளவிலோ-குறிப்பிட்ட எல்லைகளிலோ—அன்றித் தனிப் பட்ட கல்லூரிகளிலோ வசதிகள் அளிக்கப்படலாம். மற்றுத், **தமிழ்நாடு முழுமைக்கும் இந்தியைக் கட்டாயப் பொதுமொழியாக்குவதானது மிக மிக அறியாமையோடு கூடியதும் பொறுப்பற்றதுமாகவே இருக்கின்றது.**

(ஔ.) இவையன்றியும் உயர்தரப் பாடசாலைகளின் கீழ் மூன்று வகுப்புகளில் இந்தியின் கட்டாய நுழைப்பானது பயனற்றதிலும் நலனற்றதாகவே விளங்கும். அவ்வாறு நுழைப்பதானது பள்ளிக்கூடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள பாட ஒழுங்குகளின்—பாடத்திட்டங்களின் சுமையை மிகுதிப்படுத்துமென்றும், பிள்ளைகளின் கல்விக்குப் பேரிடராய்ச் சிக்குப் படுத்துமென்றும் ஆசிரியன்மார் கூறும் தடையைத் தாங்கள் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். இந்திமொழிக்கு இடங்கோலுவதற்காக அறிவு பயக்கும் வேறு பாடங்களைக் குறைத்து விடலாம், இல்லையேல் எடுத்து விடலாம் என்று தாங்கள் கூறும் பொருத்தமற்ற கருத்தை, நாட்டின் பல போக்குகளுக்கும் பிள்ளைகளின் நலன்களுக்கும் தேவையான கல்வியின் எழிலினையும் கட்டினையும் காரணமின்றியே குலைப்பதாகுமென்று எல்லா மேதக்க கல்வி வல்லுநர்களும் தடுக்கின்றனர். தங்கள் புலன் சொல்லாமலில்லையெனினும், கொள்ளாமலே விடுக்கும் மற்றோர் படலமும் இக் கேட்கத்திற்குண்டு. உயர்தரத் தொடக்கப் பாடசாலை மேல் வகுப்புக்களில், அல்லது உயர்தரப் பாடசாலைக் கீழ்வகுப்புக்களில் மட்டிலும் பயிற்றப்பட்டுப், பின் விடப்பட்டுத் தம் பாடசாலைக்கும் கல்லூரிக்கும் உரிய நடைமுறையில் வழங்காத அவர்களால் மறக்கப்பட்டுக் கிடக்கும் இந்தி போன்ற இன்னொரு மொழியின் அற்ப அறிவானது எக்காலத்தும் எத்தகையோர்க்கும் எம்மாட்டான நன்னோக்கத்தையும் நிறைவுபடுத்தாதென்பது தெளிவு. அவ்வாறுள்ள பயன் தராத அறிவுக்காகச் செலவு செய்யும் மிக்க பொழுதும் தக்க எழிலும் ஒரு பயனுமின்றி வீணே ஆவதுமல்லாமல், இது

பள்ளிக்குச் செல்லும் தீவினைப்பட்ட இளவல்களின் மேற்கல்வியாகிய மாக் கலங்களைக் கவிழ்க்கும் இடிகுண்டுகளாய் அதன் அடியுற நிற்க எதுவா கினும் ஆகலாம். தம் பிற்கால வாழ்க்கையில் தமக்குத் தேவையாய் இருக்க லாம் என்று கொள்ளும் ஒரு சிலருக்கும், அது ஏதோ ஒன்றிற்குப் பயன் படுவ தாயிருந்தால், அவர்கள் தம் பொதுக்கல்வி முடிந்த பிறகே, கல்லூரிப் பட்ட தாரிகள் அல்லது பதவி உரிமைப் பட்டதாரிகள் ஆனபின்பு பயிலும் பயிற்சி யாக அதனைக் கற்கவேண்டும். அதுவும் இந்தி போன்ற தேவைக்கு மேற் பட்ட துணைக்கருவிகள் வேண்டும் என்று விரும்புவோரின் விருப்பத்திற்குரிய தாக மட்டிலும் இருத்தல் வேண்டும். உயர்தரப்பாடசாலைகளின் முதல் மூன்று வகுப்புக்களில் இந்தி என்னும் இக்கட்டினை எல்லாப் பிள்ளைகள் மேலும் சுமத்துவது, அறவே ஊதியம் அற்றதாய் இருப்பதோடுங் கூட, எவ்வித மான உட்குறிப்பினையுங் கூடுவதற்கு ஏலாததாயும் இருக்கின்றது.

திராவிட மக்களில் மற்றெந்தப் பிரிவினர் மீதும், தங்கள்பால், எதுவரி னும் வருக என்று, தற்போதைக்குச் சுமத்துவதில்லையாகும் எனக்கொண்டுள்ள முடிபாகிய இந்தத் தடிதலுக்கு இம்மாகணத்திலுள்ள எந்த மக்களைக் காட்டிலும் தமிழர் மட்டிலும் உரியர் ஆகி நிற்கின்றனரோ! இன்னும், தாங்கள் முகம்மதி யர்களின் எதிர்ப்புக்களுக்கு விடையிறுக்கும் வாயிலாக இந்தி மொழியை யேனும், நாகரி எழுத்தையேனும் எந்த முகம்மதியர் மீதும் அவர்கள் விருப் பத்திற்கு மாறாக அவர்களின் உடன்பாடின்றி வற்புறுத்தப் போவதில்லை என்று ஏற்கனவே உறுதியும் கூறியிருக்கின்றீர்களே! தமிழ் நாட்டிலுள்ள எத்தகைய குடிமக்களுக்கும் ஒருங்கு போன்றதாய தங்கள் நல்லெண்ணத்திற் குரிய குறிப்பைக் காட்டாதது ஏனோ? முகம்மதியர்களின் மனம் வெறுத்துப் பொருதற்குறும் மிரட்டலுக்கு அஞ்சித் தாங்கள் விட்டுக் கொடுக்கின்றீர்கள் என்றும், அமைதி விரும்புந் தமிழ் மக்களின் பொறுமை வாய்ந்த எதிர்ப்புக் களையும் வேண்டுதல்களையும் தாங்கள் புறக்கணிக்கத் துணிகின்றீர்கள் என்றும் கொள்வதற்கோ இடமும் இல்லை. இங்ஙனம் அழுக்காறுண்டாக்குந் தரமான பாகுபாட்டினுக்கு நாளதுவரை தாங்கள் யாதாமொரு காரணமும் எங்களிடம் கூறினீர்களுமில்லை.

(௫.) தமிழின் பிற்கால நிலைமையை இந்தி தாக்காதென்று நம்மவர் எல் லாரும் நம்பவேண்டுமென்று தாங்கள் விரும்புகின்றீர்கள், தனிப்பட்ட அரசியல் முறையிலும் அதனைத் திறம்பட நடாத்தும் வகையிலும் தாங்கள் ஒரு மா பெருந் தலைவராய் இருக்கலாம். ஆனால், தாங்கள் உகக்கும் அரசியற் றுறைப் பரப்புக்குப் புறத்தேயுள்ள கல்விக்குரியதும், மொழிக்குரியதும், நேர்மைக்

குரியதுமான சிக்கல்களில் தங்களுக்கு மாறுபாடாக நினைப்பதற்குத் தாங்கள் எங்களுக்கு விடையருளல் வேண்டுமென்று, தங்கள் நாட்டுப் பற்றிற்கும் அரசியலறிவிற்கும் உரிய முழுப்பணிவுடன் வேண்டிக்கொள்ளுகின்றோம். இந்தி இந்திய மொழிகளுள் ஒன்று. உயர்தரமான அரசியல் மொழிக்குரிய சிறப்புரிமைகளையும் செல்வாக்கினையும் போர்த்துக்கொண்டு மிளிரும் இந்தி, தமிழுக்கு ஓர் தீங்கு விளைக்கக்கூடிய எதிரியாகி விடுவது திண்ணம். ஓர் நவீனத் தலைவியைப் போல் அறிமுகப்படுத்தப்படும் இந்தியின்பால் காதல் கொண்டு நோக்குமாறு, ஒன்றனை ஊன்றிப்பார்க்கும் அறிவுபெறாத் தமிழ் இளைஞர்களுக்குத் தாங்கள் இப்பொழுதே நயப்புரை புகட்டுகின்றீர்கள். இந்தி என்னும் கன்னிப் பெண்ணுடன் நாணமின்றிக் கூடிக்குலாவி ஏற்குமாறு மனம் ஈடுபடச் செய்வதற்கு, மேலைக்கே வரப்போகும் தொழில் உடைமையை மயக்கவல்ல பரிசமாகத் தங்கள் சொல்லுறுதியின் வாயிலாகவாவது நீட்டுகின்றீர்கள். முழு ஆட்சி முறையோடு கூடிய அரசாங்கத்தின் தனி ஆதரவுகள் பெற்றிருக்கும் எந்த மொழியும், சொந்த மொழிகளால் இழக்கப்பட்டதும், வந்த மொழிக்குத் தகுதியற்றதுமான பயன்களை நுகர்வதாகவே இருக்கும். எண்ணிப் பாராத வேற்றரசியலின் ஆதரவு கொண்ட அதனால், உள் நாட்டு மொழிகள் இறந்தொழிந் தழிக்கப்படா எனினும், தேய்பிறை மதியம் போல் எழிலெல்லாம் வவ்வப்பட்டு, ஆண்மை குன்றிச் செயலற்றுக் கிடக்குமாறு செய்யப்படும். ஆங்கில ஆட்சியினர் ஆங்கில மொழியைக் கட்டாயப் பொதுமொழியாக்குவதற்கு என்றைக்கும் முயற்சித்ததில்லை யெனினும், அது இந்த வழியில் போதுமான அளவு தீமையைவிளைத்திருக்கின்றது. தற்காலீகமாக ஏற்பட்டுள்ள ஆட்சியினரால் ஆங்கிலத்திற்குக் கொடுக்கப் பெற்ற நன் மதிப்பே காரணமாகவும், அதனாலேயே தூண்டப் பெற்றும், தற்கவலை மேற்கொண்டு, தன் மக்களை தன்னைப் புறக்கணிப்பதை நீண்ட நாளாகத் தமிழன்னை பொறுத்து வந்திருக்கின்றனள் என்பது மறுத்தற்கியலாததொன்றாய் விளங்குகின்றது. தன்னாட்சி மன்றத்தாரும் தமிழர்களும் இப்போது தான் சிந்நாட்களாக நம் வேற்றாட்சியனரோடு எதிர்த்துப் போராடி நம் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் முறை தவறிய உயர்வினை விலக்கி விடுமாறு வெற்றியை அடைந்தோம். அங்ஙனம் ஒழிக்கப் பட்ட இடத்திற்கு இதுவரை எங்கோ பதுங்கியிருந்த இந்தி மெலுக்காய் நடந்து வந்து, ஆங்கிலத்தினும் மிகுதியான துன்பம் விளைக்கக்கூடிய அலகையாய் ஊழி ஊழி உடன்நின்று நந்தமிழன்னையின் ஊனையுண்டு–உயிரை வவ்வுதற்கு உடன்படவொண்ணாது என்பதனை யாவரும் உணர்தல் வேண்டும். ஆங்கிலமோவெனின், இனி இந்தி அடையப்போவதைக் காட்டிலும் குறைந்த

ஆதரவும் ஊக்குதலும் அளிக்கப்பட்டு இருந்திருக்கிறதாகையால், தமிழ்நாட்டில், தமிழுக்கு மாற்றூட்டியாவதற்கில்லாமல் பெரிதும் புறப் புற மொழியாகவே இன்றைக்கும் இருந்து வருகின்றது. இந்தி தமிழுக்குச் சக்களத்தியாகி விடாது என்று கூறும் சப்பை மொழி விளம்பரங்களினால் உணர்ச்சியோடு கூடிய எந்தத் தமிழ் மகனையும் ஏய்த்து விடக்கூடாது. இந்தி விருப்ப பாடமாக மட்டிலும் இருக்குமென்று கூறுவதாயிருந்தால், அப்படிப்பட்ட வழக்குக்கு இடம் உண்டாயிருக்கலாம். ஆனால் இந்தி கட்டாய பாடமாக ஆக்கப்பெற்று, புதிது போர்க்கப்பட்ட தனி ஆதரவுடனும் செல்வாக்குடனும், ஆட்சியிலுள்ள தக்காரின் நம்பிக்கையூட்டப் பெற்ற தொலைவுக் காட்சியால் இரட்டிக்கப் பெற்ற வன்மையுடனும் செல்வாக்கான அரசாங்க மொழியாக நிலவப்படுமானால், தமிழ் நாட்டிலே மக்களின் பொது மொழியாகத் தமிழ் இருத்தற்கு மாறாக எந்த அளவில் இந்தி தீங்கிழைக்கு மென்று கணிப்பதற்கு முக்காலமும் உணர்ந்த ஞானிகள் நமக்கு வேண்டுவதில்லை. பிற்காலத்தில் அப்படிப்பட்ட தீவினைப் பயனை ஏற்குமாறு ஏதேனும் பிணையாட்சி (Federal Government) அச்சுறுத்துமானால், அதனைத் தன் முழு ஆற்றலுடன் மறுத்து நிற்பது அப்போதுள்ள தமிழ் மாகாண அரசாங்கத்தாரின் கடமையாகும்; அவ்வரசாங்கத்திற்கு ஒன்றுபட்ட கட்டுப்பாடு கொண்டு உடன் நின்று தக்க பக்க பலம் அளித்து, அங்ஙனமுள்ள போராட்டத்தை மேற்கொள்வது தமிழ் மக்களது கடனாகும். ஆனால் அதற்கு மாறாகத் தங்களைத் 'தமிழர்கள்' என்று கூறிக்கொள்ளும் மாந்தர்களே பதவியில் அமர்த்தப்பட்டவுடன், தாங்கள் முழுமனதுடன் ஒரு புதுமையான பிலுக்கு மாற்றூட்டியை, வீட்டினுள் அழைத்து, தமிழனை தன் இல்லத்திலேயே இருந்து இடர்ப்படுமாறு உறுதிப் படுத்தும் சூழ்ச்சிகளை எண்ணுவார்களானால், என்னே நாம் இயல்புவதற்குண்டு!

(௩) இந்தியினால் இவ்வாறேற்படும் நச்சுப்பலனேயன்றி, இந்தி ஒரு கட்டாயப் பொதுமொழியாக ஆக்கப்படுமானால், அக்காலே, நிகழ்காலத்தும் எதிர்காலத்தும் தமிழை உள்நாட்டு மொழியாக நிலவச்செய்யும் எண்ணத்திற்கு மாறாகத், தமிழ் நாட்டின் பொதுமொழியாக இந்தியை வலியப்புகுத்துவது தமிழினுடைய நேரிய ஒருமையையும் மொழியின் வளர்ச்சியையும் உள்ளூற நஞ்செனத்தாக்கும். நெடுங்கணக்கின் முறையிலும்; ஒலிகளின் திரட்சியிலும், எழுத்தியல், சொல்மூலம், புணரியல், பொருளியல் உண்மைகளிலும்; இலக்கணத்திற் போலவே சொற் பெருக்கத்திலும்; உரைமரபிலும்; கருத்துக்களின் அடுக்கு முறையிலும்; உள்ளபடியே ஒவ்வொரு விதத்திலும் இந்தியும் தமிழும் முறையே கீழுலகமும் மேலுலகமும் போல் நிலவுகின்

றன. கட்டாயமாய் அவைகளுக்குள் ஏற்படும் கலப்பு காதற்கலப்பாய் இருக்கவும் முடியாது; தமிழ்மொழிக்கும் அதன் இலக்கியத்திற்கும் இயற்கை வளர்ச்சிக்கும் சார்பாகவேனும் இருக்கமாட்டாது. அவ்வாறுள்ள சேர்க்கையின் தன்மையால் உண்டாகும் தாக்குதலை உளவமைதியுடன் ஆராய்ந்து பார்த்தல் இசையாது. தன் உடன் பிறந்த திராவிடமொழிகள் ஏற்றிருப்பதுபோலத்தமிழும் வடமொழியின் எழுத்துக்களையும், வடமொழியின் ஒலி அமைப்புகளையும் தாராளமாய் ஏற்றுக்கொள்ளத் தடையாயுள்ள தன் நேர்மையையும் தனித்தியங்கும் வாய்ப்பையும் தமிழ் தன் வக்கிர உணர்ச்சியால் விடமாட்டேன் என்பதாகப் பன்முறையும் குற்றம் சுமத்தப்படுகிறது. ஆனால், தமிழ்மக்கள் மட்டிலும் அவ்வாறுள்ள தங்கள் அன்னையின் வக்கிர உணர்ச்சிக்காக வருந்தாதவர்களாய் இருப்பதோடுகூட, அதுபற்றி இறும்பூதெய்துகின்றவர்களாகவும் இருக்கின்றனர். தமிழர்களைத் தாக்கிய பலப்பல புரட்சிகள் இருந்தும் எல்லாவிதமான மாறுதல்களையும் எதிர்த்துப் பல்லாண்டு பல்லாண்டாக வலிமை காட்டி நின்ற ஆரியத்தினை, ஆரவாரமின்றிப், பின் வாங்குதலின்றி எதிர்த்து நின்று, அவர்கள் மொழியின் நேர்மையினை அவர்களுடைய அன்னையின் வக்கிர உணர்ச்சியன்றோ அழியாமற் பாதுகாத்து வந்திருக்கின்றது! அங்ஙனமிருக்க, இப்பொழுது, ஒரு நாடன்று, ஒரு கண்டமே என்று சொல்லதக்க இந்தியா முழுமைக்கும் புதிய அரசியல் அறிவோடு கூடிய ஆச்சாரியர்களின் பணி மேற்கொண்டு, ஒரே பொதுமொழியின் கள்ளத்தேசப்பற்றுக் கலைவளர்ச்சியை ஒரே தன்மையாய்ப் பரப்புவோம் என்னும் பேரால், தங்கள் ஆருயிரென்ன ஆதரித்து வளர்க்கப்பெற்ற அருந்தமிழ் மரபுரிமைக்கு இன்று நச்சுப்புகை ஊட்டப்படுவதையோ, அல்லது இடிகுண்டுகளால் மடிக்கப்படுவதையோ நேரில் நின்று தம் கண்ணாரத்தாமே கண்டபின் பொறுத்துக்கொண்டிருக்கத் தமிழ்மக்களால் இணங்கமுடியாது. ஏற்கனவே கற்றும் கல்லாத கலக வேட்கையினர் அச்சு நிலையங்களிலும் அரசியல் மேடைகளிலும் பயனில் சொற்களால் தமிழினை வன்கொலை செய்கின்றார்களே! எழுத்துப்பிழைகளையும் தவிர்த்துக்கொள்ளுதல் ஏலாத மாந்தர் எத்தனையோ பேர், தங்கள் பிழைகளையெல்லாம் சீர்திருத்த உரைநடைகள் என்றும், நவீன உலக நடைகள் என்றும் இறும்பூதெய்தி ஊர்வலங்கொண்டு வருகின்றனர்! சொற்களின் முதலில் ஒலிக்கமுடியாத மெய்களைக்கொண்டு எழுதுவதும், மனங்கொள்ளாத புணர்ச்சி மாறுதல்களுடன் எழுதுவதும், எல்லாம் தமிழர் செவியைப் புண்படுத்தக்கூடியனவற்றையே எழுதுவது நாளுக்குநாள், மொழியின் சீர்திருத்தம் என்ற பெயரால் மல்கிப் பெருகிக் கொண்டு வருகின்றது. வடமொழி மிக விரிந்ததும் நயப்பாடுடையதுமான

மொழி. அவ்வாறிருந்தும், ஆரியத்தின் சொல்வழக்கெல்லாம் இருந்தவை இருந்தபடியே தமிழினுக்குள் ஏற்றுக்கொள்ளுதல் அடாதெனத் தமிழர் வரையறுத்திருக்கின்றனர். வினை ஆண்மையிலுள்ள தங்கள் மொழியின் தனித் திறமையைக் காக்கும் நோக்கத்துடனேயே தகுதியான மொழிப் புணர்ச்சிக்கு வேண்டிய வரம்புடன் இலக்கணம் வரையறுத்து வைக்கப்பட்டிருக்கின்றது. புணரியலின் வரம்புகளை இயலுக்கு மாருக மாற்றி விடுவதையோ, அல்லது சொல்லிலக்கணம் ஒலியிலக்கணங்களின் மூல உண்மைகளையெல்லாம் எண்ணிப்பாராமல் அடியோடு கெடுத்து விடுவதையோ எந்த மொழியிலுமே இசைத்துவிடுதல் கூடாது. இவ்வாறு இசைத்துவிடுதலே கூடாததாயிருக்க, இலக்கணத்தின் மூலங்களிலுங்கூட இறுமாந்த அறியாமை நிறைந்த மாந்தர் தலையிட்டு நிற்பதை மொழியின் சீர்திருத்தம் செய்கிறார்கள் என்று பாராட்டுவதற்கு யாங்ஙனம் இயலும்! தான் கொண்ட நயத்திலும், பா நலச் செறிவிலும் கிரேக்க மொழிக்கே ஒப்பிடக்கூடியது—மற்றெந்தத் தனிமொழிக்கும் மேம்பட்டது என்று ஐரோப்பிய மேதக்க ஆராய்ச்சியாளர்களால் கருதப்படும் தமிழினை வளப்படுத்துவதற்குவேண்டிய சொற்பெருக்கேனும், இலக்கண வரம்பேனும், ஊக்குவதற்குரிய இலக்கியச்சிறப்பேனும் இந்தி மொழியின்பால் இல்லவே இல்லை. ஒவ்வாத ஒலிகளையும் இணங்காத மொழிகளையும் கடன் வாங்கிக்கொள்ளும் வசதிகளைத் தமிழுக்கு உண்டாக்கப் போனால், இந்தியின் சந்தியினால் அதற்கு இழிகாமும் அழிகாமுமான பயனே பயனாய் முடியுமென்பது திண்ணம். விருப்ப பாடமான அளவில் மட்டிலும் இருக்குமானால் இந்தியைப் பயில்வோரின் தொகை குறைவுபட்ட அளவுள்ளதாய் இருக்கலாம், தமிழுக்குத் தீங்கிழைக்கும் ஆற்றலும் புறக்கணிக்கத் தக்கதாய் அவர்களிடம் குறைந்திருக்கலாம். அவ்வாறில்லாமல், இந்தியை எல்லாருக்கும் கட்டாயப் பொதுமொழியாக நுழைத்தால், தமிழ்மொழி என்று ஒன்று இருந்தது இல்லாமற் பட்டொழியும். தங்கள் எண்ணம் நிறைவேற்றப்படுமானால் தமிழுக்குத் தவிர்க்க முடியாமல் ஏற்படும் தீங்குகளில் இவை ஒரு சிலவேயாகும். எத்தனையோ தனி மொழிகள் இறந்தொழிந்தும், தமிழ் மட்டிலும் தப்பிப்பிழைத்து வருகின்றது; இற்றைக்கு 5000-ஆண்டுகளுக்கு மேலாக இன்னும் உடல்வன்மையுடன் வாழ்ந்து வருகின்றது; இதற்கு ஒரே காரணந்தான். அதாவது, தமிழ் தன் இயற்கை எளிமையைப் பாதுகாத்து வந்திருப்பதோடும், தன் உள்ளத்துள் இயற்கைக்கு முரண்பாடான மாயங்களுக்கும், தன் குருதியினுள் நாசகர மருந்துகளின் உட்பாய்ச்சல்களுக்கும், தன் மேனியின்மேல் பொறுத்தற்கரிய ஒட்டுப்படைகளுக்கும் இடங்கொடாதிருந்ததேயாகும். புதுமையாய் இந்திமயம் ஆக்கப்பட்ட வடமொழியைத்

தொன்மை வாய்ந்த தனித்தமிழுடன் பிணைத்து விடுவதற்காக, எண்ணித்துணியாத ஆய்வுகளைச் செய்தால், அது தமிழ் மக்களின் பிற்கால நிலைமைக்கும் தமிழ்மொழியின் உறுதிப்பாட்டிற்கும் பேரிடியான விளைவுகளை விளைவிக்கலாம்.

இவ்விதமாகத் தமிழ்நாட்டின் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இந்தியைக் கட்டாயத்தில் புகுத்தும் தங்கள் உசாவுகை, தமிழ்மக்களுக்கு எந்தவிதமான உறுதிப்பயனையும் விளைவிக்காததோடு மட்டும் நின்றுவிடாமல், அவர்களுடைய மொழிக்கும் நேர்மைக்கும் அஞ்சத்தக்க கலக்கத்தை விளைப்பதற்குக் காரணமும் ஆகிவிடலாம். தமிழ்மொழியின் பிற்கால நிலைமைக்குத் தீங்கிழைக்கவேண்டும் என்றாவது, அல்லது தமிழ்ச்சிறாரின் மேற்கல்வி முற்போக்கைத் தடைப்படுத்திக் கெடுக்கவேண்டும் என்றாவது எண்ணித்துணிந்த தீய நோக்கங் கொண்டீர்கள் என்று தங்களை எவருமே குற்றம் சாட்டமாட்டார்கள். ஆனால், தங்களுடைய எண்ணங்கள் மாறுமல் அத்தகைய கேடுகளிலும், கேடு வளர்ச்சிகளிலும் கொண்டு சேர்ப்பனவாய் இருந்தால், அத்தகைய பயன்களையே கருதினீர்கள் என்று சாட்டப்படும் குற்றத்தினின்றுந், தாங்கள் தப்பித்துக்கொள்ளமுடியாது. கருத்தும் நோக்கமும் ஒருபொருட் சொற்கள் அல்ல என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு அறிஞனும் அவனவனுடைய திட்டமான ஓர் வினையினின்றும் இயற்கையாக விளையும் விளைவுகளைக் கருதினராகத்தான் திட்டங்களைத் துணிவது போலவே, அறநூலும் அளவை நூலும் அறியும். தங்களுடைய எண்ணங்கள் ஒரு வழியாலல்லாமல் பல வழிகளாலும் தமிழ்மக்களைத் திட்டமாய்க் கேட்டிற்கே செலுத்தும் என்பதனை நான் தங்கட்கு எடுத்துக்காட்ட முயன்றேன். இதையுணர்ந்தும், எந்த நாட்டு அரசியல் வரலாற்றிலும் இல்லாத தனித்த இந்தத் தீய எண்ணப்பொலிவைத் தவிர்க்காமல் இருப்பீர்களானால், தாங்கள் தமிழ்மக்களுக்கேயல்லாமல், அவர்களுடைய மொழிக்கும் நேர்மைக்கும், தங்கள் எண்ணங்களிலிருந்து விளையக்கூடிய எல்லாத் தீங்குகளையும் வடுக்களையும் கருதினதற்கு உண்மையில் தாங்கள்தான் பொறுப்பாளராக நிற்க வேண்டும். இந்த ஆராய்வைப் பற்றிப்பேசத் தகைமை வாய்ந்த எல்லாரும் எங்ஙனும் மறுப்பதாக உள்ள முனைவை எதிர்த்து எந்த அரசியல் வழக்காளியும் முனைவராத ஒருபடித்து இதுவாம்.

அவ்வாறிருந்தும் தங்கள் எண்ணங்களை நிறைவேற்றியே தீர்ப்பதென்றும், தமிழ் எல்லைக்குள் மட்டிலும் தற்காலத்துக்கு மாத்திரம் எல்லாப் பள

ளிக்கூடங்களிலும் இந்தியைக் கட்டாயமாய்ப் புகுத்துவதென்றும் உள்ள சார்புடையவர்களாய் இருக்கிறீர்கள் என்று கூறப்படுகிறது. தாங்கள் மேதக்க அறிஞர்களில் ஒருவர் என்றும், காலஞ்சென்ற லோகமான்யருக்குப் பின்னல் மிக்க நுட்பமும் தெட்பமுள்ள அரசியற் றலைவர் என்றும் எல்லாராலும் அறியப்பட்டிருக்கிறீர்கள். இருந்திருந்தாற்போல், திடீரென்று ஒரு அரசியல் முறையை ஒரு நோக்கமும் இல்லாமல் இறக்கி விடுவீர்கள் என்று நம்புவதற்கு மிக்க கடினமாயிருக்கிறது. தங்களுடைய மன ஊக்கமும், பிடித்ததை நழுவவிடாது கெட்டியாய்க் கைக்கொண்டு நிற்கும் தன்மையும்கூட நன்கறியக்கிடக்கின்றது. என்றாலும், தங்களுடைய தற்போதைய புதிய நிலைமைக்குரிய பெரிய பொறுப்பைப் புலன் கொள்ளாதிருத்தல் தங்களால் இயலாது.

இனி, அரசமன்றத்தில் இருக்குங்கால், தாங்கள் ஒரு கட்சித்தலைவர் கோலத்தில் நிற்கும் உறுதியையும் தங்கள் நிலைமையையும் மட்டிலும் நினைத்த வண்ணம் இருக்கமுடியாது. மக்கள் அனைவர்க்கும் ஊழியம் செய்வதே தன்னாட்சி மா மன்றத்தாரின் குறிக்கோளாகும். நமது மாகாண ஆட்சியின் பொறுப்புவாய்ந்த முதன் மந்திரி என்னும் நிலையில், மாகாணத்திலுள்ள எல்லா மக்களும், அவரவருடைய அரசியல் பொருளாதாரக் கட்சிச் சார்புகளைக் கருதுவதின்றியே, தங்கள் கருத்துக்களின்பாலும் உயர்நிலை அடைவதன் தொடர்பான மனப்போக்கின்பாலும் உரிமையுடையவர்களாய் இருப்பதற்கு இசைவீர்களென்று நான் உறுதியாய்க்கூறுகின்றேன். தங்கள் ஆட்சியின் எல்லா முறைகளிலும், எல்லோராலும் அறியப்பட்ட தங்களுடைய மக்கட்டலைமை (ஜனநாயக)க் கொள்கைகளைப் பழக்கத்தில் கொண்டுவருவீர்கள் என்று எல்லா மக்களும் எதிர்பார்க்கலாம். தன்னாட்சி மா மன்றத்தாரின் உயர்வான ஆணை வாயிலாகவாவது, அல்லது அதன் தொடர்புடைய மக்களிடமிருந்தாவது ஒரு கட்டளையைக் கைக்கொள்ளாமல், எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் தமிழர்களுடைய எல்லாக்குழந்தைகளும் கட்டாயமாக இந்தி பயில்வேண்டுமென்று தாங்கள் என் தமிழ்மக்களை மிரட்டுகின்றீர்கள்? இப்போதைய நிலைமையில் தங்கள் போக்குப் பொதுமக்களுக்கு இன்னதென விளங்காததாகவே தோன்றுகின்றது. இலயோலாக்கல்லூரி வடமொழிக் கழகத்தினர் முன்னிலையில் தாங்கள் செய்த சொற்பொழிவில், கூடையினுள் இருப்பது குள்ளநரி யென்று தாங்கள் காண்பியாதிருந்தால், தங்களுடைய முடிபின் அடிப்படையான கருத்து இன்னதுதான் என்று அறிந்துகொள்வது இற்றைநாள் வரைக்கும் முடியாததாகவே இருந்திருக்கும். பிற்காலத்தில்

தமிழநாடடிலுளள ஒவவொரு தமிழமகனும வடமொழி பயிலவேணடுமெனறு விருமபுவதாகவும், அதனால இநதிமொழியை ஒரு கடடாய பாடமாககத தாங கள விருமபியதாகவும இலயோலாக கலலூரியில தஙகள சொறபொழிவில உணமையாக வெளியிடுவதறகு எணணங கொணடிருநதீரகள தாஙகள பினனும, இநதியானது உணமையாகவே நோககுமிடததது, வடமொழியே எனறும, ஆதலால இநதியின கடடாயககலவி முறையானது வடமொழியின கடடாயககலவி முறையை நாடெஙகும பரபபுவதை நிறைவேறறுமெனறும விளககம கூறிய தஙகள உளளககிடககையைத தெளிவுபட உணாததினீாகள வைணவககோடபாடுகளோடு கூடிய பெரிய ஆசசாரிய மரபில மிகக உறுதிப பாடுளள திருவடிததொணடா எனற முறையில இநத நோககம தஙகளைப பெரிதும கனபபடுததுவதாயிருககலாம ஆனால, பெரிதும தொணடு செயய விருமபும வடமொழிககு ஓாபடியாக இநதியை வலியபபுகுததி, அதன வாயி லாக வடமொழியின முறபோககையோ, அலலது தமிழமககளின அமைசசராக அமாநதிருககும கோலததில தாஙகள இமமுடிபுகளைச செயவதனால 'தமிழ மககளின முறபோககையோ கொணடுளளதாக எழும தஙகள முடிபுகளின் அறிவுடைமையையும கனிவையும ஐயஙகொணடு உசாவுதறகுத தமிழமக களுககுப பொதுவாகத தாஙகள விடையளிககவேணடும பிறா கொளகை களுககு இடஙகொடுககுந தனமையிலும, வடமொழியை வஞசகமறறு வா வேறகுந தனமையிலும குறைநத அளவில மூவாயிரம் ஆணடுகடகு முனன மேயே தமிழா முனைநதவாகளாய இருநதாரகளெனறும, அதனையே இந நனெடும நூறறாணடுகளாக இநநாடடினில வழககில வைததிருககிறாரக ளெனறும அறியககிடககினறது தொலகாபபியா காலததிருநதே தமிழறி ஞாகள வடமொழியுடன நடபுரிமையை மேறகொணடவாகளாயிருநதாரகள, தமிழ நெடுஙகணககின ஒலியிலககணததுககுப பொருநதாத ஒலிபபுளள வடமொழிசசொறகளையும தமிழில ஏறறு வழஙகுதறகு வேணடிய இலககண வரைகளைத தஙகள பேரிலககண நூலகளில வரைநதிருககினறனா இவவாறாக வடமொழியுடன கொணட 'தமிழின கூடடுறவு பயனளிககததககதாயும், ஒனறுககொனறு காடடும நனமதிபபில வனமைபபாடு கொணடதாயும இருநதுவநதிருககினறது ஆனால, தனிபபடட அலலது மிகுதிபபாடான மதிபபை வடமொழிககு அளிததல வேணடுமெனறு கடடாயபபடுததுவதற காக செயயும எநத முயறசியும எதிாபபையே கிளபபிவிடுவதலலாமல, தவிாததறகரிய பகைமைககுக கைகாடடியாகவும ஆகிவிடலாம இதுவனறி யும, வடமொழியினபாற கொணடிருககும மேமபடட பறறினைத, தாஙகள் உணாநதிருபபதாகக காணபபடுவதைப பாாககிலும கூடுதலான நோமுகமாக

வும, கொடுவினையாகவும் இநதி கெடுதது விடுதலும ஆகலாம. ஏனெனருல, சென்னையிலுளள வடமொழிக கழகதது உறுபபினாகள மிக ஆழநதாராயநது தெளிநதபின, இநதியைக கட்டாயததில நுழைபபதும பரபபுவதும அநதநதத தாயமொழிககுக கேடுபயககும எனபதோடு மட்டிலும அமையாது, இநதி புகுததபபெறற மககளுககிடையே வடமொழிப பயிறசியின முறபோககினுக கும முட்டுககட்டையாய நிறகுமெனறு, தஙகள முடிவைக கணடிதது ஓா தீாமானம நிறைவேறறினாகள இஙஙனம தங்கள் ஒருபட்சமான முடிபுகளை எதிர்ப்பவாகள் தமிழர்கள் மட்டிலும் அல்லவென்பதையும், வடமொழிப் பற்றுதலுள்ளவர்களுங்கூட இநதியின் முகத்தில் விழிக்கவும் நாணி எதிர்க் கின்றார்கள் எனபதையும தாஙகள காணபீாகள பேருககாகவேணடி, அதி லும மிகப பாரதூம சிறநததுமாய, மககள உணரும உணாவினையும சா ரும சார்பினையும பொருடபடுததி நிறகும தனனுடசி மா மனறததாரின மககட்டலைமைக கொளகையையே அடியோடு கெடுததுவிடத துணிவீாகள எனறு கருதுவது எமமால இயலாது கைவிடவொணணுத ஒழுகக நெறி யின பாதுகாபபிறகாக, நெறியான முறையில பயனபடுததும உறுதிபபாடே பாராட்டுதறகுரிய குணஙகளில ஒனறுகும ஒரு கொளகையை அடிபபடை யாகக கொணடதல்ல வெனினும, கருதது மாறுபாடிருபபினும நலலெண ணம மாருத தனனலத தறகாபபிறகுரிய ஆயவுகளில பொதுமககளின கருத தைப புறககணிதது, விடடுககொடாது நிறகுநதனமை விடாபபிடியேயாகும ஆனல, தலைமைபபதவியில தஙகளுககிருககும பயிறசியினுலும, அறிவுடைமை யினுலும, பழககததினுலும அவவாறுன விடாபபிடிககு ஆளாகத தஙகளால முடியாது உணமையில, உளளபடியே, தஙகூறறுபபடி இமயமலைபோன்ற பெரும்பிழைகள் தம்மாற் செய்யப்படுவதை ஒத்துக்கொள்ளும் இயலுடைய மகாத்மாவின் பரநத எண்ணம் அவருடைய பெரும்புகழை வானுற ஓங்க வே செய்தது அவரவாகளுடையவும ; முடிபுகளில ஏறபடும பிழைபாடு களை ஒததுககொளவதனுல அவரவாகளுடையவும போ கெடடபோவது மிலலைக, கெடடதேவையுமிலலை இநத நிலைமையிலாவது திடமெனததாங கள செயத முடிபுகளிலுளள பிழைபாடுகளை புணாநது, மககளுடைய முடிபுககும—விருபபததிறகும—வேணடுதலைககும இணஙகி விடவே கண ணேடடமாய இருநதீாகள எனறு அறிககை செயதுவிடடீாகளானுல, தனனுடசிமனற அரசியல வழககாளி எனற முறையில தஙகடகிருககும பெருமபோனது மிக மிக ஓஙகி விளஙகும மறறு, பரபரபபான முடிபு களை நிலைநிறுவேறறுவதில பொறுமைகாட்டி, எதிாபபுககாராகள கூறும கூற றினுககு ஒருசிறிதும மதிபபுககொடாமல இருநதால, இதுவரை மறககபபட

டனவாயில்லாமல், செய்தித்தாள்களில் வெளிவந்து நிலவுந் தங்கள் சொற்பொழிவுகளை நம்புவதாயிருந்தால், அம்மக்கள் தலையில் அடுக்கடுக்கான—அலங்கோலமான வசை மொழிகளை அடிக்கடி பயன்படுத்திப் பேசுதற்கே அடுக்கின்றீர்கள் என்று கருதப்படும். 16—10—37ல் வெளிப்போந்த 'தினமணி' யிலும், 17—10—37ல் வெளிப்போந்த 'தமிழ்மணி'யிலும் தங்கள் எதிர்ப்புக்காரர்களைக் கீழ்க்காணப்படும் தேர்ந்தெடுத்த சொற்களால் பாராட்டினீர்கள் என்று அறிக்கை செய்யப்பட்டிருக்கின்றது: "ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவதால் தமிழுக்கு ஆபத்து வந்துவிடும் என்று சிலர் கூக்குரல் போடுவதைப்பற்றிப் பிரதம மந்திரி இக்கூட்டத்தில் பிரஸ்தாபித்தார்." "இதுவரையில் இவர்களுக்குக் கொஞ்சம் அறிவு இருக்கிறதென்று நினைத்தேன். ஆனால், இவர்கள் 'அறிவிலிகள்' என்பது இப்போது நன்றாகத் தெரிகிறது............... ஹிந்தி கட்டாய பாடமாக ஏற்பட்டுத்தான் தீரும்.

இதுவுமன்றி, 'இந்து'ச் செய்தித்தாளில், தங்களுடைய நல்ல அறிவுரைகளுக்குத் தமிழ்மக்கள் செவிசாயாது இந்தியைக் கற்றுக்கொள்வதில் பின்வாங்குவார்களானால், தங்களுடைய வட இந்திய நண்பர்கள் விரைவில் தமிழர்களைத் தென்னாட்டு "வானரசேனைகள்." என்று அழைப்பார்கள் என்று தாங்கள் கூறியதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அறிவின் மாட்டுத் தாங்கள் செலுத்த நினைக்கும் தனியரசாட்சிக்கும், தங்களுடைய எதிர்ப்பாளர்களை "அறிவிலிகள்" என்று கூறுவதற்கும் தாங்கள் கொண்ட கூறுபாடான உரிமையைத் தங்கள் மூப்புப் பருவத்தினாலும், முன் கோபத்தினாலும் ஏற்பட்ட ஆற்றாமை என்று புறக்கணித்து விடலாம். ஆனால், இந்தி கற்க மாட்டோம் என்று சொன்ன குற்றத்திற்காக, அதுவும் ஓர் வகைக் குற்றத்தின்பாற் பட்டதாயிருக்குமானால், தமிழ்மக்கள் அவ்வளவு பேரையும் "குரங்குகள்" என்று அத்தகைய மிக இழிவான வசை மொழிகளால் வெளியாக்கப்பெற்ற தங்களுடைய மேட்டிமையானது, எமது தாழ்மையான கருத்துப்படி, பொறுத்துக்கொள்ளக்கூடியதல்ல. தங்கள் முன்னிலைக்குச் சேர்க்கப்படும் அரசியற் செய்திகளையுங்கூட ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிப்பதும், இகழ்ந்து தள்ளப்படுவதும் தங்கள் புதிய அரசாங்க நிலைமையின் நெருக்கடியால் ஏற்பட்டவைகளாக இருக்கலாம். ஆனால், தமிழ் மரபினர் அவ்வளவு பேருக்கும் விளைக்கப்பட்ட முறைகேடான—காரணமற்றதான மானக்கேட்டிற்குச் சரியொத்த பாராமுகமான தவறுதல்களைத் தங்கள் நண்பர்களுங்கூட எத்தகைய காரணங்கள் கூறியும் அவற்றை நடுநிலை வாய்ந்தனவென்று உறுதிப்படுத்தி நிற்க முன்வரமாட்டார்கள். தங்கள் போன்ற ஒரு தலைவர்—இவ்வளவு காலமாகத் தென்னாட்டுக் காந்தி என்று துணைத்திருப்பெயர்பெறும்

முறையில உழைததது வநத ஒரு தலைவா, ஒரு நாகரிகமுறைபறறியாவது தமிழ மககளைககலநது ஓராமல, ஏற்றுக்கோள்ளமுடியாததும் திகைப்பைத் தாக் கூடியதுமான முடிபுகளை இவவளவு திடீரெனறு தெனனிநதியாகளுககு எதிரே நிறுததுமபடியான கசபபுள்ள வெறுபபைக காட்டியதானது என அறிவை ஓரளவு கலஙகசசெயது விட்டதெனபதைத தாழமையுடன ஒததுக கொளகினறேன இபபொழுது தாஙகள தமிழமககளுககு அளிததுதாகக கூறபபடும மானககேடானது என உளளததில உணடாககியிருககும கலககம, தஙகளால மானககேடு செயயபபட்ட மககளைப பொறுததிருபபதைப பாாக கிலும தஙகளைப பொறுததே மிகுதியாயிருககினறது தாஙகள ஒரு உண மையான வைணவராயிருபபதனால, "சிறிய திருவடியை"த தொழுபவராய இருககிறீாகள இராமரிடம் உறுதிமொழி கொடுததபடியே உணமையாய நடநதுகொணடபடியால, எலலா உணமையான வைணவாகளிடமிருநதும அநத வானர சேனைகள -வசைமொழிகளைககாட்டிலும வாழததுமொழிகள பெறுதறகே தகுதியுளளனவாயிருககினறன இராமருடைய மனவியையும திருடிககொணடுபோயக கறபழிகக முயறசிதத ஆரிய அரககாகளைககாட்டி லும, ஆரிய இராமருககுப புறமபானவாகளாயிருநத வானராகள அவா மனை வியை மீட்டுககொடுகக உதவி புரிநதமையால, மிகுதியான மதிபபிறகே உரியராயிருககினறனா இஙஙனமாக அவவானராகள இகழுரைகள பெறு வதைப பாாககிலும புகழுரைகள பெறுவதிலேயே பெரிதும தகுதியுளளவா களாய இருககினறனா வடஇநதியாகள தமிழாகளை வானரசேனைகளென்று அழைககககூடுமெனறு தாஙகள எடுததுககாட்டியதன கருதது எமககு இன்ன தென விளஙகவிலலை அது ஒரு வரவேறபு மொழியாக மட்டிலும இருககு மானால, அபபொழுது அககுறிபபு ஒரு பொருளுமறறதாய நிலவும அது இழிவே கருதபபட்டுச சொலலபபட்டதொனறானால, அநத மேறகோள இரட்டிதத துனபததையே உணடாககுவதாயுளளது தஙகள கட்டளையின படி இநதியைக கறபதறகு மறுககும தமிழாகளைக கணடிககும வசைமொழி யாக, பொருததமறறதும மதிபபறறதுமாய வானரசேனைகளை எடுததுககாட் டியது ஒருபுறமிருகக, தஙகள உவமை, அறநூறபடி தவறுடைமையைக கொணடுளளதெனபதைத தஙகளுககு எடுததுககாட்டுதறகு எமககு விடை யளிபபீாகளா? பெருமபானமையான எலலா வானரத தலைவாகளும வட மொழியறிநதவாகளாகவும, வடமொழியிற பேசககூடியவாகளாகவுமே இருந தனா' எனபது பொதுவாக அறியககிடககினறது சிறப்பாக அனுமார் (நவவியாகரண) ஒன்பது வகை இலக்கண பண்டிதராய் இருநதார் இரா

மா தமமுடைய உறற நணபாகளிடததும துணைவாகளிடததும குரஙகு களுடைய பிதறறல மொழியைககொணடு உரையாடியதாகத தெரியவிலலை. ஆகையால, தாங்கள் கூறும் குரங்குகளின் சான்றனது இநதி உருக்கொண்டு இப்போது மிளிரும் வடமொழியை விருப்பத்துடன் கற்று அதிற்பேச விரும் புங் குழுவினர்க்கே மிகப் பொருத்தமானது. தங்கள் தாய்மொழிக்கு அடுத்த மொழியாக ஏதோ ஒருவகை வானர வடமொழியைக் கொண்டிருநத வானரர்களுக்குச் சுற்றங்கள், இநதிக் கல்வியை எதிர்த்து விலக்கும் வணங் காமுடித் தமிழர்களாய் இருத்தல் முடியவே முடியாது

தஙகள நிலைமையிலுளள தலைவாகளுககு இவவாறன பொருளிலலா ததும எணணிபபாராததுமான கையாணடிச சொறகள மிகப பொருததமற றவையெனறும, அததகைய சொறகளைத தாஙகள சிறிதும பயனபடுததிப பேச முயலாது அறவே தவிாததொழிததல வேணடுமெனறும நான எணணத துணிகினறேன. தஙகள குறைகளைக கூசாது கூறுவோா தஙகளபால அனுபபும செயதிபபோககு வாததிறகு விடையளிபபதறகு அவாகள தகுதி யறறவரொனறோ உறறவரெனறோ தாஙகள கருதலாம ஆனால, தாஙகள நாடடிநத ஓா தனனுடசிமனற வழககாளியாய இருபபதனால, தமிழநாட டில தஙகளுடைய முடிபுகளுககு இருநதுவரும எதிாபபின மிகுதிபபாட டையும வலுவையும கருதிபபாராது இருநதுவிடமாடடீாகள எனறு நான இனனும நமபிககையுடையவனாகவே இருககிறேன இவவாறு நிலவும எதிாபபினை 'மெடருஸமெயில" (Madras mail) 'இநது" (Hindu) முதலான செயதிததாளகளில அறிககையிடடபடி, கலவி மநதிரியாா இப பொழுது சினனாடகளாகப பொதுமககளைக காணுதறகுச செயதுவநத சுறறு லாவின பிறகு, கபடமறறு வெடட வெளிசசமாக ஒததுககொணடிருககிறாா இததுடன, தனனுடசியின பிறகால நிலைமையில தமிழுககு நேரககூடிய ஊறுபாடுகளையும, தமிழநாடடு மககளின அமைதியான முறபோககினுககு ஏறபடககூடிய சிககுகளையும மிகவும பரபரபபினறிச சீாதூககிப பாாததல இனறியமையாததெனறு ஒபபுககொணடுமிருககிறாா. கேடபோரின நலத தைக கோரியவைககாடடிலும தஙகள நலததையே பெரிதும பொறுத தெனறு நான எணணததுணிகினறேன, இதே சிககலைப பொறுததுக கடைசியாகப பெருநதகையாளா டாக்டர் சுப்பராயன் அவாகள ஒரு பொ துககூடடததில செயத சொறபொழிவில வஞசனையினறி—அஞசுதலினறி எடுததுககூறியபடி தாஙகள சீாதூககிப பாாபபதாய இருநதால, தாஙகள தஙகள முடிபுகளை இவவளவு விரைவாக—இவவளவு திடீரெனறு நுழைககப

படுவதற்கு இடந்தர மாட்டீர்கள்; ஆனால், மக்களின் விருப்பத்திற்கு இணங்கிய மதிப்பு அளிப்பவர்களாய்த் தங்கள் சார்பினை மாற்றிக்கொள்வீர்கள் என்று நான் உறுதியாக உணர்கின்றேன்.

இந்தியைப் பொறுத்தவரையிலுள்ள தங்கள் முடிபுகளுக்கு எம்முடைய எதிர்ப்பை நட்புரிமையில்லாத தற்சுட்டான கொடுமையென்று தவறுபடக் கொள்ளமாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடனும், தங்கள்பால் என்றுமுள்ள மதிப்புகளுடனும்,

தங்கள் தாழ்மையுள்ள ஊழியன்,

எஸ். எஸ். பாரதி.

அண்ணாமலைநகர்,
25—10—37.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	31	நூழைக்குந்	நுழைக்குந்
4	12	ஆசிரியற்களிற்	ஆசிரியர்களிற்
7	23	ஏற்றனவுந்	ஏற்றதும்
,,	24	திருந்தியனவுமான	திருந்தியதுமான
8	28	வல்லுனர்	வல்லுநர்
11	10	(தீர்த்த தரிசனம்)	(தீர்க்க தரிசனம்)
12	25	கொண்டுவரும்போது	கொண்டுவருவது
14	11	கண்டித்தொழித்தன	கண்டித்தொழித்தன.
,,	12	பிரிட்டின்	பிரிட்டன்
,,	13	அறிந்ததே	அறிந்ததே.
,,	23	செல்வர்களும்	செல்வமும்
15	2	வேண்டும்.	வேண்டும்?
,,	19	வல்லுனர்	வல்லுநர்
19	5	குற்றமற்றவரகாவே	குற்றமற்றவராகவே
,,	17	இன்றியயையாமை	இன்றியமையாமை
23	24	இயல்புவதற்குண்டு!	இயம்புவதற்குண்டு!

தமிழ் மக்களின் முன்னேற்றததிற்காக வெளிவரும்

செய்தித்தாள்கள்.

'செந்தமிழ்ச்செல்வி' (திஙகள வெளியீடு)	மானேஜா 'செநதமிழசசெலவி' 6.பவளககாரதெதரு,செனனை
'விடுதலை' (நாள வெளியீடு)	மானேஜா 'விடுதலை' ஈரோடு
'குடியரசு' (கிழமை வெளியீடு)	மானேஜா 'குடியரசு' ஈரோடு.
'நகரதூதன்' (கிழமை வெளியீடு)	மானேஜா 'நகரதூதன' உறையூா, திருசசி
'நம் நாடு' (கிழமை வெளியீடு)	மானேஜா 'நம நாடு' 31, பிராடவே ஜாாஜ டவுன, செனனை
'நவமணி' (கிழமை வெளியீடு)	மானேஜா 'நவமணி' 2/25 மீருன சாயபு தெரு மவுணட ரோட, செனனை.
'தமிழ்பபொழில' (திஙகள வெளியீடு)	மானேஜா 'தமிழபபொழில' தமிழசசஙகம கருநதடடாஙகுடி, தஞசாவூா.

குறிபபு :— தமிழ மககள எலலாரும மேலே குறிபபிடடுளள செயதித தாளகளுககுக கையொபப நேயாகளாயச சோநது, அவறறை ஆதரிபபது இனறியமையாததாகும

வேண்டுகோள்.

தமிழ் நாட்டில் உள்ள பள்ளிககூடங்களில் இந்தி மொழி கட்டாய பாடமானால், உடனே அதை எதிரததொழிக்கும பணியில் மாணவாகள உட்பட எலலாத தமிழ் மக்களும முனவர் வேணுமாயக் கேட்டுககொள்ளப்படுகிறாகள்.